1876-ல் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams: "CATHOLIC PRESS", JAFFNA.
Telephone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

80-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1955-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 27-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 42-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### மோட்டர்கார் விபத்து

அரசாங்க கூட்டுறவுப்பகுதியின் தலைமைஸ்தான இன்ஸ்பெக்றர் திரு. ஏ. காசிப்பிள்ளை அவர்களும், மற்றிருவரும் சென்றமோட்டர்கார் சென்றசனிக்கிழமை மீசாலையிலே றெயின்வண்டிகள் தங்கும் ஸ்தானத்துக்குச்சமீபமாக ஓர் மரத்துடன்மோதிய காரணமாக மூவரும் கடுங்காயமடைந்து ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டார்கள்.

### றாத்தற்கணக்கில் அரிசி

இலங்கையிலே முதன்முறையாகக் கொழும்புநகரில் சென்றதிங்கட்கிழமை முதல் பங்கீட்டுஅரிசி றாத்தற்கணக்கிலே நிறுத்துவிற்கப்பட்டுவருகிறது. அங்கு ஓர்ஆரம்பமாகவே அதுநிறுத்து விற்கப்படுகிறது. ஒருறாத்தல் அரிசி விலை 25 சதம். இரண்டுறாத்தல் அரிசி ஒருபடியாகும். கொழும்புநகரில் பங்கீட்டு அரிசி கூட்டுறவுப் பண்டகசாலைகள்மூலமாகவே விற்கப்படுகிறது. அங்குஎல்லாமாக 63 பண்டகசாலைகள் இருக்கின்றன. நிறுவையிலே களவு நிகழாவண்ணம் அரசாங்க உணவுப் பகுதி அவற்றிற்கெல்லாம் தராசுபடிகள் இரவலாக உதவியிருக்கின்றது. அது இவைகளை விலைகொடுத்துவாங்கிப் பரிசோதனைசெய்திருப்பதுடன், அவற்றிலே நகரசபைஅதிகாரிகளால் முத்திரைகுத்தவும் பட்டிருக்கின்றன.

### கண்கள் தான அனுமதி

ஒருவர் தான்இறந்தபின் தனதுகண்களைப்பெயர்த்துப் பிறர்கண்களிலே பொருத்தத்தக்கதாய்த் தானஞ்செய்வதை அங்கீகரிக்கும்சட்டம் சென்றவியாழக்கிழமை பிரதிநிதிகள் சபையிலே சகலபடிகளிலும் வாக்கெடுக்காமலே அரங்கேறியுள்ளது. சுகாதார மந்திரியார் இதனைஎடுத்தாண்டபோது, தங்கள்மரணத்தின்பின் தங்களுடைய கண்களை அரசாங்கத்துக்குச் சனங்கள் நன்கொடையாக அளிக்கக்கூடியதாகும்படி செய்வதே அதன்நோக்கமெனக் கூறலாயினர். அதன்படி, நன்கொடையாக அளிக்கப்படுங்கண்களை அரசாங்கத்தினிடம் ஒப்படைப்பது, இறந்தவருக்குப் பொறுப்பாளிகளாயுள்ளவர்களின் கடமையாகும். நோய்கண்டவர்களின் கண்களிலே பிறர்கண்களைப் பொருத்தும் சிகிச்சை அதிகரித்துக்கொண்டுவருவதால் இறந்தவர்களின் கண்கள் அடிக்கடி தேவைப்படுகின்றன.

### உதவிஇரசாயன பரிசோதகர்

திரு. வி. குலநாயகம், எவ். ஆர். ஐ. சி., டி. ஐ. சி. அவர்கள் அரசாங்க உதவிஇரசாயன பரிசோதகராய் நிரந்தரமாக நியமனஞ்செய்யப் பெற்றுள்ளார். இவர் வயாவிளானிலே ஓர்வர்த்தகராயிருந்து காலஞ்சென்ற திரு. என். வல்லிபுரம்அவர்களின் சிரேஷ்டபுதல்வரும், வழக்கறிஞர் திரு. வி. இராசநாயகம், ஜே. பி. அவர்களின் சகோதரருமாவர்.

### முத்துச்சலாபப் பரிசோதனை

இலங்கையிலே முத்துச் சலாபம் நடத்துதற்கான ஆரம்பபரிசோதனைகள் நடத்துதற்கென்று கடற்றொழிற்பகுதி அதிகாரிகள் சென்றஞாயிற்றுக்கிழமை டிறூவ்ளர் எனும் மோட்டர்படகிலே அரிப்புக்குச் சென்றிருக்கிறார்கள். அரிப்புக்கும், முள்ளிக்குளத்திற்கும் இடையிற்றான் இந்தப்பரிசோதனைகள் நடைபெறவிருக்கின்றன. இவற்றின் முடிபு அனுகூலமாகக் காணப்படுமிடத்து, அடுத்தவருடஆரம்பத்தில் முத்துச்சலாபம் நடத்தப்படும்.

### ஜெருசலேம் திருயாத்திரை

இலங்கையையும், இந்தியாவையுஞ் சேர்ந்த யாத்திரிகர்கள் பதினமரின் கோஷ்டி ஒன்று வருகிறமார்கழிமாதம் 19-ந்திகதியன்று கொழும்பிலிருந்து ஆகாயவிமானத்திலே பெய்றூத்நகர் சென்று, பின்னர் அங்கிருந்தும் ஜெருசலேம் நகரையடைந்து, பெத்லகேமில் நடைபெறவிருக்கும் கிறிஸ்மஸ்விழாக் கொண்டாட்டங்களில் கலந்துகொள்ளவிருக்கின்றது. இந்த யாத்திரிகர்கள் பரிசுத்தநாட்டில் தங்கியிருக்கும்போது ஜெத்செமனிய பூங்காவனத்தையும். ஒலிவேத்மலையையும், திவ்வியகர்த்தர் மரணவஸ்தைப்பட்ட திருக்கோவிலையும், வியாகுலபாதை வழியாகத் திருக்கல்லறைக்கோவிலையும், கல்வாரிமலையையும், ஜோர்தான்நதிக் கரையிலே கிறீஸ்துநாதர் ஞானஸ்நானம்பெற்ற இடத்தையும், ஜெறிக்கோநகரையும், சவக்கடல், பெத்தானி, பெத்பேஜ், எம்மாவுஸ், பெத்லகேம்முதலாம் இடங்களையும், கிறீஸ்துநாதரின் ஜனனஆலயத்தையும், பாற்கெபிலையையும், ஆயர்களின்வயலையும், பழைய, புதியஏற்பாட்டுச் சம்பவங்களுடன் சம்பந்தப்பட்ட தலங்களையும், பெய்றூத், பால்பெக், தமஸ்குஸ்நகர்களிலே சரித்திர, கலாசார சம்பந்தமான இடங்களையும் தரிசிக்கவிருக்கின்றார்கள். இவ்வருடம் பாஸ்குத்திருநாள்காலத்திலே பரிசுத்தநாட்டுக்கு ஓர்யாத்திரையை வழிநடத்திச்சென்ற திரு. றெக்ஸ் அமரசேகர அவர்களே இந்த யாத்திரிகர்கள் கோஷ்டியையும் வழிநடத்திச்செல்லவிருக்கின்றார்.

### மேற்றிராசன ஐக்கியசங்கம்

திரிகோணமலை மேற்றிராசன ஐக்கிய சங்கமகாநாடு இன்று 27-ந்திகதி வியாழக்கிழமை திரிகோணமலை, அர்ச். மரியநாயகி மேற்றிராசனஆலயத்தில் ஆரம்பமாகி வருகிற 30-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை முடிவாகும். இம்மகாநாட்டிலே பொதுவுடைமைக் கொள்கை, தேசியம், பகிரங்கஆராதனையில் சாதாரண கிறீஸ்துவமக்கள் பங்கு என்னும்விஷயங்கள்பற்றி ஆங்கிலத்திலும், தமிழிலும்குருப்பிரசாதிகளால் சொற்பெருக்குகளும், விவாதங்களும் நடைபெறவிருக்கின்றன. சங்கவருடாந்தமகாநாடு ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடந்தேறும்.

### குறைந்தஅரிசி—குறைந்தமா

நிகழும் 1955-ம்ஆண்டிலே புரட்டாசிமுடிவுள்ள முதல்ஒன்பதுமாதங்களிலும் இலங்கையில் இறக்குமதிசெய்யப்பட்ட அரிசியின்பெறுமதி 16கோடியே 45 லட்சம்ரூபா. சென்றவருடத்தின் முதல்ஒன்பதுமாதங்களிலும் இறக்குமதிசெய்யப்பட்ட அரிசியின் விலை 20 கோடிரூபா. அதனால் இவ்வருட அரிசிஇறக்குமதியால் 3 கோடியே 55 லட்சம்ரூபா மிச்சம்ஏற்பட்டிருக்கிறது. இவ்வருடத்தின் முதல்ஒன்பதுமாதங்களிலும் இறக்குமதியான மாவின்விலை 6 கோடியே 59 லட்சம் ரூபா. ஆனால், சென்றவருடத்தின் முதல்ஒன்பது மாதங்களிலும் இறக்குமதியானமாவின் விலை 8 கோடியே 66 லட்சம்ரூபா. அதனால் இவ்வருட மாஇறக்குமதியாலும் 2 கோடியே 7 லட்சம்ரூபா மிச்சம் ஏற்பட்டிருக்கிறது.

### ஆஸ்பத்திரியும் கன்னியாஸ்திரீமாரும்

மட்டக்களப்பு அரசினர்ஆஸ்பத்திரியில் நோயாளரைப்பராமரிக்கும் நேர்ஸ்மாராகக் கன்னியாஸ்திரீமாரை நியமிக்குமாறு தக்கநடவடிக்கை எடுக்கவேண்டுமெனக்கேட்டுச் சென்றதிங்கட்கிழமை மட்டக்களப்புப்பட்டினசங்கத்தின மாதாந்தகூட்டத்தில் திரு. ஏ. தவராஜா அவர்கள் ஓர் பிரேரணை கொணடுவந்தார். அதன் முடிவாக "நாட்டிலே சிலஇடங்களிலுள்ள ஆஸ்பத்திரிகளில் வெளிநாடுகளைச்சேர்ந்த கன்னிகாநேர்ஸ்மாரின் சேவையை நீடிக்கச்செய்ய விரும்பாதவர்கள் இருக்கின்றார்கள்; அந்த ஆஸ்பத்திரிகளிலிருந்து அவர்களை அகற்றநேர்ந்தால் மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்கு அவர்களை அனுப்பிவைக்க வேண்டும்" என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. அவ்வேளை திரு. எம். திசைவீரசிங்கமவர்கள் பேசியபோது, தாம்ஏற்கனவே திரிகோணமலை மேற்றிராணியாரைச் சந்தித்து, மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்குச் சிலவெளிநாட்டு நேர்ஸ்மாரான கன்னியாஸ்திரீமாரைப் பெற்றுத்தாஒழுங்கு செய்ததாயும், ஆனால், அதற்குச் சுகாதாரமந்திரியாரிடமிருந்து கிடைத்தபதிலிலே "பிறநாட்டுக் கன்னிகாநேர்ஸ்மாருக்கு வேலைகொடுத்தல் அரசாங்கத்தின் கொள்கையன்று" என அறிவிக்கப்பட்டிருப்பதாயும் தெரிவித்தார். அதன்பேரிலேயே முன்சொன்னபிரேரணை கொண்டுவந்து அரங்கேற்றப்படலாயிற்று.

### புத்தகுருவின் ஆதரவு

அத்துறுவெல்லவிலே எக்சத்தருண சங்கமய என்னும் சங்கத்தின் பகிரங்க கூட்டமொன்று சமீபத்தில் நடைபெற்றபோது, அதற்குத்தலைமைவகித்த நத்துடுவ மேத்தானந்த தெரோஎனும் புத்தகுரு தமது தலைமையுரையிலே: தமிழ்மக்களின்உரிமையைப் புறக்கணிப்பது ஜனநாயக நீதியாகமாட்டாது; சிங்களத்துக்கும், தமிழுக்கும் சமஅந்தஸ்துக் கொடுப்பதே மிகவும் நீதியான செயலாகும்; அதுவேநாட்டின் சமூக, பொருளாதார முன்னேற்றத்துக்கு வேண்டிய ஒற்றுமையைத் தரக்கூடியதாகும்; ஆகவே, சிங்களத்துக்கும், தமிழுக்கும் சமஅந்தஸ்துக் கொடுப்பதானது ஆட்சிப்பீடத்தில் அமர்ந்திருப்போரின் தவிர்க்கமுடியாத கடமையாகுமெனக் கூறியிருக்கின்றார். வேறுபுத்தகுருமாரும் அக்கூட்டத்தில் கலந்துகொண்டார்கள்.

### பிரதிநிதி எச்சரிக்கின்றார்

மத்துகாமப் பிரதிநிதியாகச் சனப்பிரதிநிதிகள்சபையில் இருந்துவருகின்ற திரு. வில்மட் பெறேரா அவர்கள் அங்குவலகெதற எனுமிடத்திலே சனசமூகநிலயமொன்றின் ஆரம்பவிழாவில் பேசியபோது: "சிங்களம் ஒரேயொருஅரசாங்க பாஷையாக ஆக்கப்படின் இலங்கையிலே இடையில்நின்று இடிபடும் குட்டிநாடுகள் ஏற்படுவது தப்பாது" எனக் கூறியிருக்கின்றார். மேலும் அவர்கூறியது வருமாறு: சிங்களப் பாஷையை உடனேதானே அரசாங்க பாஷையாகக் கொண்டுவருவது சிறுபான்மைச் சாகியங்கள் மத்தியிலே அமைதியின்மையை உண்டுபண்ணுவதாய்முடியும்; இன்னும் சனநாயக போக்குக்கு மாறாகவுமிருக்கும்; உதாரணமாக, தமிழ்பேசும்மக்கள் பெரும்பான்மையினராக இருந்துவருகின்ற கிழ்மாகாணம் தனதுநலன்களைப் பாதுகாக்குமெனநினைத்துச் சென்னை இராசதானியுடன் இன்றியமையாதவசையாக அவசியம் சேர்ந்துகொள்ளும்; தனது கேந்திரஸ்தானம் காரணமாகத்திரிகோணமலை ஓர்விசேஷப்பட்ட இடமாகும்; பாஷைசம்பந்தமான விஷயம்போன்ற ஓர்விசேஷப்பட்ட கருமமானது, பல்வேறுசமூகங்களிடையே ஐக்கியபந்தனம் பலப்படுத்தப்பட வேண்டுமானால் சாவதானமாகவும், சமாதானமாகவும் செயலாற்றப்பட வேண்டுமென்பதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதபோதக மனப்பான்மை

[ சேலம்மேற்றிராசன ஸ்தாபித வெள்ளிவிழாவின்போது ஸ்ரீ எஸ். அந்தோனிமுத்து அவர்கள்நிகழ்த்திய சொற்பொழிவின் சாரம் ]

(சென்றவாரத் தொடர்ச்சி)

நிழல்கொடுக்காத மாமில்லை. வாசனைவீசாத நறுமலரில்லை. இன்பரசம் சொட்டாத நற்கனியில்லை. கிறீஸ்துவைப் பிறருக்கு அளிக்காத கிறீஸ்தவனும் இருக்கக்கூடாது. ஆம், இருக்கவேகூடாது. ஏன்? ஏனென்றால், குன்றின்மேலிட்ட சுடர்விளக்காய் இருக்கவேண்டியஅவன் கூடைக்குள்வைத்த விளக்காய் இருக்கிறான். கிறீஸ்துவத்தைத் தழைக்கச் செய்யவேண்டியஅவன், அந்தோ! அதைத் தடிகொண்டுஅடிக்கிறான். அதன்முன்னேற்றத்திற்காகப் பாடுபடவேண்டிய அவன் அதற்கு முட்டுக்கட்டையாக இருக்கிறான்.

பாடுவது குயிலுக்கும், ஆடுவது மயிலுக்கும் எவ்வளவுஇயல்பானதோ, அவ்வளவு இயல்பானதுதான், கிறீஸ்துவன் கிறீஸ்துவத்தை மற்றவர்களுக்கு எடுத்தோதுவதும். உப்பு உணவுக்குச் சுவையூட்டுவதுபோல, நன்மலரின்நறுமணம் இளந்தென்றலில்கலந்து கமழ்வதுபோல, சூரியஒளியைச் சந்திரன் பிரதிபலிப்பதுபோல நமதுவாழ்க்கை—பகிரங்க,அந்தரங்கவாழ்க்கை—நமது சொல், செயல், சிந்தனை அத்தனையும் சுவையூட்டும் உப்பாய், மணம்வீசும் மலராய், கிறீஸ்துநாதரின் பிரதிபிம்பமாய் இருக்கவேண்டும்.

“வேதபோதகஞ்செய்வது குருமாரின்கடமை; நம்முடையதுஅல்ல; அவர்களுடையஅலுவலில் நாம் தலையிடக்கூடாது; விரலை நீட்டக்கூடாது; அடியெடுத்துவைக்கக்கூடாது”என்று எண்ணுவதும், பேசுவதும் சுத்த முதலாம்நம்பர் முட்டாள்தனம். வேதபோதகம் அவர்களின் ஏகபோக தனி உரிமையல்ல, தனிச்சொத்தல்ல. அவர்களுடைய முகத்துக்கு முன்னாலேயே சொல்லுகிறேன்—முதுகுக்குப் பின்னால்அல்ல—அது நம்ஒவ்வொருவரினதும் உரிமை, தனிச்சொத்து. அவர்களுக்கும், நமக்குமுள்ள பொதுச் சொத்து.

பொழுதுபோக்குக்காக ஓய்வுவேளையிலே பிரியப்பட்டுச்செய்யும் இஷ்டவேலையல்ல அது. ஒவ்வொருகிறீஸ்துவனினதும் நீங்காக்கடமை, கடவுளின் கண்டிப்பானகட்டளை. இந்தக் கடமையைச் செய்யத்தவறினால் தண்டனைஉண்டு. “நற்கனிகொடாதமரம் வெட்டப்பட்டு அடுப்பில்போடப்படும். வெப்பமும், தட்பமும் அற்றநீரை நாம் வாந்தியெடுப்போம். என்னுடன் இல்லாதவன் எனக்குவிரோதமாய் இருக்கிறான்.” வேதபோதகத்தில் ஈடுபாடு இல்லாதவன், ஆன்மஇரட்சணியத்தில் ஆர்வங்காட்டாதவன் தெய்வத்துக்கு விரோதியாகிறான். தெய்வத்தால் வெறுக்கப்படுகிறான். நரகநெருப்புக்கு ஆளாகிறான். இப்போது சொல்லுங்கள், வேதபோதகம் குருமாரின் தனி உரிமையாஎன்று. பொழுதுபோக்குக்காகச் செய்யும் இஷ்டவேலையாஎன்று.

குருமாரும், மேற்றிராணிமாரும் அபிஷேகத்தால், அதிகாரத்தால் வேதபோதகப்படையின் பிரதமதளபதிகள். முன்னணிவீரர்கள். ஞானஸ்நானத்தால், உறுதிபூசுதலால் நாம் துணைத்தளபதிகள். பின்னணிவீரர்கள். அவ்வளவுதான் நமக்கும், அவர்களுக்குமுள்ள வித்தியாசம். கடமை இருசாராருக்கும் பொதுவானது, கண்டிப்பானதுமே. வேதபோதகம் குருமாரின் ஏகபோக உரிமைஅல்ல. ‘அல்ல, அல்ல’ என்று ஆயிரம்முறை சொல்லவிரும்புகிறேன். எவறெஸ்ற் சிகரத்தின் உச்சியில்ஏறி நின்றுகொண்டு ஆயிரமாயிரம்முறை அறைகூவி அறிவிக்க ஆசைப்படுகிறேன். ஏனென்றால், “வேதபோதகம் குருமாரின்கடமை, நம்முடையதுஅல்ல” என்று இன்னாள்வரை எண்ணினோம். எண்ணியபடி பேசினோம். பேசியபடி நடந்தும் வந்திருக்கிறோம். இனிமேலும் அவ்விதமே நினைத்துப்பேசி நடக்கலாமா? நம்முடைய வேதத்திற்கு யார்வந்தாலென்ன, நம்முடைய வேதத்தைவிட்டு யார்போனாலென்ன என்று கவலையற்றுக் கண்ணைமூடிக்கொண்டிருக்கலாமா? கவலைகொள்ள வேண்டும். கண்ணீர்வடிக்கவேண்டும். பூங்காவனத்தில் நடந்ததுபோல இரத்தவியர்வை சொட்டவேண்டும்.

தன்னுடன்இருந்த 99 ஆடுகளை அப்படியேவிட்டுவிட்டுக் காணமற்போன ஓராட்டைத் தேடியலைகிறான் தேவஇடையன். வீட்டைவெறுத்து வெளியேறிய ஊதாரிப்பிள்ளை எப்போது திரும்பிவருவானோவென்று வழிமேல்விழிவைத்து, வைத்தகண் வாங்காமல் மாடியிலிருந்து பார்த்தவண்ணமாய் இருக்கிறான் பெற்றதகப்பன். பெட்டியில் பத்திரமாய்இருக்கும் பணமுடிப்புப் பெரிதல்ல, கையிலிருந்து உருண்டோடிவிட்ட அந்த ஒருசெப்புக்காசுதான் கவலையைத்தருகிறது வீட்டுக்காரிக்கு. பூலோகத்தில் ஒருபாவி மனந்திரும்புவானாகில், அவன்பொருட்டுப் பரலோகத்தில் அதிக மகிழ்ச்சிஉண்டாகும். இந்த மந்தையைச்சேராத இதரஆடுகளும் எனக்குண்டு; அவைகளையும் நான் கொண்டுவந்து சேர்க்கவேண்டும். நான் தாகமாயிருக்கிறேன். இந்த வேதவாக்கியங்களை — தேவஉவமைகளை ஊன்றியோசிக்கும் எந்தக்கிறீஸ்துவன் வேதபோதகம் குருமாரின் கடமை, தன்னுடையது அல்லவென்று நினைக்கக்கூடும்? எந்தவிசுவாசி மூச்சுவிட்டு மூச்சுவாங்கும் சுவாசியாய் இருக்கமுடியும்?

கடவுள் காயீனைக்கேட்டார்: “எங்கே உன்சகோதரன் ஆபேல்?” என்று. அதேகேள்வியையே நம்மையும்கேட்பார். காயீனைப்போல, “அவனுக்கு நான் காவலாளியா?” என்ற எதிர்க்கேள்வியையா பதிலாகஅளிப்பது? “இதோ! என்சகோதரன்” என்று நம்மால் இரட்சணியம் அடைந்த இன்னொருவனையாவது சுட்டிக்காட்டவேண்டும். நம்முடைய இரட்சணியம் பிறரின் இரட்சணியம். பிறரின் இரட்சணியம் நம்முடைய இரட்சணியம்என்பதை நாம் ஒருகணமும் மறத்தல்ஆகாது.

அகிலஉலகையும் ஒரேசொல்லால் ஆக்கிக்காத்துவரும் ஆண்டவன் இந்த உலகைஇரட்சிக்க இதோ நம்முடைய உதவியை—ஒத்துழைப்பை நாடுகிறார். பெறுதற்கரிய பெரும்பேறுஇது. ஆனால், நாம் என்னசெய்கிறோம் ஆண்டவனுக்காக? ஓடி ஒடுங்குகிறோம். ஒதுங்கிப் பதுங்குகிறோம். ஆண்டவரோ நமது ஒத்துழைப்பை நாடும்போது நாம் ஓடிஒடுங்குவதும், ஒதுங்கிப்பதுங்குவதும் சுத்தகோழைத்தனமன்றோ!

(வளரும்)

# சிந்தைக்கு விருந்தாகும் சுத்தவாளரின் சரிதங்கள்

—: ஆசிரியர், எல். பாக்கியநாதர் :—

(முன்தொடர்ச்சி)

அக்குயினு தோமையார் புகழ்பெற்ற அர்ச். சாமிநாதர்சபைக்கு ஓர்அணிகலனுயிருந்தவர். திருச்சபைஇன்று திரவியம்என்று போற்றுகின்றபலசிறந்த பிரபந்தங்களின் தந்தைஇவரே. இவர் ஒருமுறை தாம்இயற்றிய ஒருநூலைப் பீடத்தில்வைத்தபோது அருகேயிருந்த பாடுபட்ட திருச்சுரூபத்திலிருந்து குரலொலிகிளம்பியது. “தோமாஸ், நம்மைப்பற்றி நன்றாக எழுதியுள்ளாய்; உனக்கு என்னகைம்மாறு செய்வேன்” என்றுகேட்டது. உடனுக்குடனே பதிலிறுத்தார்தோமாஸ். “ஒன்றும்வேண்டாம்ஆண்டவரே, உம்மையேதந்தருளும்” என்று விநயத்துடன் வேண்டி நின்றார். இத்தகைய வெளிச்சமடைந்த வேதவிற்பன்னராகிய தோமாஸ் தமது மனம்என்றுமே இருளிலிருந்து காப்பாற்றப்பட வேண்டுமென்று விடாது செபித்துவந்தாராம்.

பிரான்சீஸ்கன்சபையின் சுடரொளியானவர் அர்ச். பொனவந்தூர். இவர் பாலியனுயிருக்கும்போதே அர்ச். ஐந்துகாயப் பிரான்சீஸ்குவினால் ஒருமுறை வருத்தங்குணமாக்கப்பட்டவர். பிரான்சீஸ்குஅடியிட்ட சபையிலேயே இவர்சேர்ந்து அச்சபையிலேயே அர்ச்சியசிட்டதனத்தை அடைந்தவர். அதேசபையின் அதிசிரேஷ்டராகி அதனைமேலும் மகிமைப்படுத்தியவர். தன்னைத்தானே அறிந்துகொள்ளல் எனும் அர்ச்சியசிட்டர்களின் அந்தரங்கத்தை நன்குஅறிந்தவர். எல்லாவற்றிற்கும்மேலாய்ச் சிலுவையிலே மானபங்கமாய்மடிந்த மனுமகனைத் தமது வாழ்க்கையின் இலக்காகக்கொண்டவர்.

அர்ச்சியசிட்டதனத்தையும், அரிய கலைக்கியானத்தையும் ஓர்உடலில் ஒன்றாகஇணைத்தசுத்தன் அர்ச். பொனவந்தூர். கலையின்உயிர்நிலையில் காட்சியளித்தகாலத்திலே இவர்தாழ்ச்சியின் உச்சியிலும் காணப்பட்டார். காலையில் வேதசாஸ்திரியாய் வியாக்கியானஞ் செய்தஇவர் மாலையில் பணியாளனாய்க் குற்றேவல் செய்துவந்தார். தெளிவிலும், ஊடுருவிச்செல்லுந் தன்மையிலும், பிரகாசத்திலும் இவரின்மனம் தனிச்சிறப்புவாய்ந்தது. அர்ச். பொனவந்தூர் எந்தக்காலத்தில் பிரான்சீஸ்கன்சபையில் உட்பட்டாரோ அந்தக் காலம் அச்சபைக்கு அதிர்ஷ்டகாலம் என்றே அனைவரும்எண்ணினர். அவருடைய தெளிந்தஞானமும், திறம்பாத தாழ்மையும் அச்சபைக்கு அனந்த ஆசீர்வாதங்களை அள்ளிஇறைத்தன. வேதசாஸ்திர விரிவுரை நிகழ்த்துவதற்காக இவர் பரீஸ்பட்டணத்திற்கு அனுப்பப்பட்டார். இவரின்புகழ் பரீஸ்பட்டணத்திற்கு அப்பாலும்பரந்தது. அல்ப்ஸ் மலைக்கு மேலாகவும் உயர்ந்தது. ரோமைமாநகரில் 4-ம்சாந்தப்பர் எனும் பாப்பரசர்கவனத்தையும் ஈர்த்தது. பாப்பரசரோ, இங்கிலாந்தில் சிறப்பிலும், செல்வத்திலும் மிகுந்த யோக்கர் ஆதிமேற்றிராசனப் பொறுப்பைப் பொனவந்தூர்மீது சுமத்தவிழைந்தார். விழைந்தும், பொனவந்தூரின் தாழ்மையான மறுப்பை ஏற்றுக்கொண்டார்.

இந்தமகிமையில்நின்று தப்பிக்கொண்ட பொனவந்தூர் வேதசாஸ்திர பண்டிதராய் ஏழுவருடங்கள் சேவித்தார். இந்தஏழுவருட காலத்துள்தான் திருச்சபையின் சிறந்த வேதபாரகர் இருவரின்சந்திப்பு ஏற்பட்டது. பொனவந்தூர் எனும் கலைக்களஞ்சியத்தினின்று கலைப்பசிமிக்க அக்குயினு தோமையார் அள்ளிஅள்ளிஉண்டார். பொனவந்தூரின் திறமையில் மயங்கிய தோமையார் அத்திறமையின் ஊற்றைக் கண்டுபிடிக்கவிரும்பினார். விரும்பிப் பொனவந்தூரை அணுகினார். அவரோ சிலநூல்களைத் தோமையாருக்குக் காட்டினார். தோமையாரும் நூல்களைக்கண்டார். “பிதாவே, இவைகளை எல்லாம் நான்கற்றுள்ளேன்; ஆயினும், தம்மிடம்கேட்டவைகளை இவைகளில் நான்காணவில்லை; தாங்கள் எனக்கு மறைக்கிறீர்கள்” என்று குறைகூறினார். பொனவந்தூர் மகிழ்ச்சிமிக்காராய் “இந்நூல்கள் எனதுநூற்களஞ்சியத்தின் ஒருசிறுபகுதிதான்; எனது பெரியகளஞ்சியமோ இதுதான்” என்று பாடுபட்ட திருச்சுரூபத்தைக் காண்பித்தார். “இதிலிருந்துதான் நீர் அதிசயப்படும் அறிவுரைகளைக் கற்றேன்; நான் உமக்குமறைத்ததாக நீர் என்னைக் குறைகூறும் களஞ்சியம் இதுதான்; இக்காயங்கள் எப்போதும் திறந்தபடியே வற்றாதஊற்றாக என்றுஞ் சுரந்துகொண்டிருக்கும்; இச்சுனையில் பானம்பண்ணியவன் என்றுமே குறைவைஉணரான்; என்றென்றுமே நிறைந்திருப்பான். இவ்விதமானபுதுமைகள் இன்றுமாத்திரம் நடப்பன அல்ல; என்றுமேநடப்பன; தேவனே ஊமைகளின் நாவைக் கட்டவிழ்த்தும், பாலியரின்வாயால் பிரசங்கித்தும் தமது சிறந்தஞானத்தைப் பொழிகிறார்” என்றார்.

தாழ்மைஎனும்புண்ணியத்தை அனுசரிப்பதில் அர்ச். பொனவந்தூர் கிறீஸ்துநாதரையே கண்டுபாவித்தார். சபையின்சிரேஷ்டராய் இருந்தபோதும் சமையல்அறையில் சமையற்காரனாகச் சமைத்தார். வேதநூல்களை விரித்துரைத்த விற்பன்னர், வேலைகாரனாய் வேலைசெய்தார். வேதவித்தியாபாரகராய், வேதவிரோதிகளின் பயங்கரமாய், பாப்புமாரின் கேடயமாய், திருச்சபையின் தம்பமாய், தமது சபையின் சுடர்விளக்காய்ப் பாராட்டப்பட்ட பொனவந்தூர் வியாதிக்காரரின் படுக்கைகளுக்குப் பரபரப்புடன் செல்வார். அவர்களை அன்பாக அழைப்பார். அரவணைத்துத் தூக்குவார். தூக்கிஉணவூட்டுவார். இவ்வாறு தமக்குக்கிடைத்த சந்தர்ப்பத்திலெல்லாம் நோயாளிகளையே பராமரிப்பார்.

தாழ்மையில் வளர்ந்துவந்த இவர் பதவிகளைவெறுத்தார். வெறுத்தபோதும், தேவபராமரிப்பின்படி சில பொறுப்புகளை இவர் ஏற்கநேரிட்டது. அதிமேற்றிராணித்துவ பதவியைத்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பாகிஸ்தான் வெள்ளப்பிரவாகம்

பாகிஸ்தானிலே சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளப்பிரவாகத்தால் பாதிக்கப்பட்டுத் தவிக்கும் மக்களுக்கு உதவியாகப்பரிசுத்தபாப்பரசர் சுமார் 50,000 ரூபா அனுப்பியிருந்தார். இதற்காகப் பாகிஸ்தானின் கவர்னர்-ஜெனறலான மேஜர்-ஜெனறல் சிகான்டர் மிர்சாஅவர்கள் அவருக்கு நன்றித்துதிதெரிவித்து, "அன்பான தங்கள்அனுதாபவருட்சியாலே ஆழ்ந்தமனவருட்சி கொள்ளலானேன்........ தங்கள்அன்பான செபங்களுக்கெல்லாம் மனப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவிப்பதில் பாகிஸ்தான் அரசாங்கத்தினரும், மக்களும் என்னுடன் சேர்ந்துகொள்ளுகிருர்கள்" எனச் செய்தியனுப்பி வைத்தனர்.

### ஓர்கோவிலில் 99 வருடம்

ஒஸ்ரென்ட்நகருக்குச் சமீபமான மிடெல்கேர்க்எனும் பெல்ஜியகிராமத்திலே அன்றுசனிக்கிழமை திருமதி ஹென்றியெற்ற வாலஎனும்பாட்டி தனது நூறும்வருட பிறந்தபெருநாளன்று திவ்வியபூசைகாணச் சென்றபோது அக்கிராமவாசிகளான காலாபிரய்கத்தோலிக்கர் வீதிகளைஅலங்கரித்து நடைபாதைகளிலே வரிசையாக நின்று அவளைவாழ்த்திநின்ருர்கள். இம்முதுபாட்டி தனது நூறுவருட சீவியகாலத்திலும் 99 வருடங்களாக அக்கிராமத்திலுள்ள அர்ச். விலிபுரோர்த்தின் கோவிலிலே ஒவ்வோர்ஞாயிறுவாரமும், விடுமுறைநாட்களிலும் தவருது திவ்வியபூசை கண்டுவந்திருக்கிருள். இவள் ஒருவயதுடையவளாய் இருக்கும்போதே இவளுடையபெற்றுர் அக்கோவிலுக்கு இவளைக் கொண்டுபோகத்தொடங்கினர். தனதுநூறும்வருட பிறந்தபெருநாளன்றுகாலை தன் வீட்டைவிட்டு வெளிகொண்டபோது, இவள் வீட்டு வெளிக்கதவின் முன்பாகமலர்கள்,படர்செடிகள் கொண்டு வில்வளைவாகச் செய்த வாயிற்பாதையொன்று அமைக்கப்பட்டிருக்கக்கண்டுபிரமித்துப் போயினள். அதன்மேல் அங்கு காத்துநின்றகுருமாரும், பூசைப் பரிசாரகரும் பரிவாரமாகப் பாட்டியைப் புடைசூழ்ந்துநிற்க, கிராமத்தின் பங்குக்குருவரான வண. ஒகுஸ்த் சோலாஷ்சுவாமியாரால் வழிநடத்தப்பெற்ற ஊர்வலமானது கோவிலைப் போய்ச்சேர்ந்தது. பாட்டி சொற்பசொற்ப தூரத்துக்கு இப்போதுமே நடக்கக்கூடியவளாய் இருந்தபோதிலும் பங்கு விசாரணைச்சங்கம் அன்றுஅவளுக்கு ஓர்கார் விட்டுக்கொடுத்தது. ஊர்வலத்திலே பாட்டி தனது 6 பிள்ளைகள், 23 பேரப்பிள்ளைகள், 21 பீட்டப்பிள்ளைகள், ஓர் கொப்பாட்டப்பிள்ளை சகிதமாய்ச் சென்றனள். கோவிலிலேஅவள் கௌரவமான ஓர்இடம் அருளப்பெற்றதும் தேவதோத்திர பாடற்பூசை நிறைவேறியது.

### அர்ச். பிரான்சீஸ்குவின் செபம்

ஐக்கியநாடுகளின் சபையிலே ஐக்கியஅமெரிக்கதேச ஸ்தானிகராய் இருந்துவருகிறவர் திரு. ஹென்றி கபொட் லொட்ஜ் அவர்களே. அன்றுஇவர் அமெரிக்க கத்தோலிக்க ஆடவர்களின் தேசியசங்கத்தில்பேசியபோது, "ஐக்கியநாடுகளின் சபையிலே கடவுளைக்கொண்டு வருவதாகிய பெரும் இலக்கானது முன்னேறத்தக்கதாய் எனக்குள்ள சத்துவத்தைக் கொண்டு இயன்றதெல்லாம் செய்துவருவேன்; கடவுளை அத்திபாரமாகக் கொண்டிராதவரையில் இந்தஉலகில் கட்டியெழுப்புகிறவர்கள் விழல்வேலையே செய்கின்ருர்கள்; இந்தப்பெரிய உண்மையிலே எனக்குள்ளநம்பிக்கையைக் காண்பிக்குமாறு செய்யக்கூடியதெல்லாம் செய்து வருகிறேன்; ஐக்கியநாடுகளின் ஸ்தாபன 'தியானசாலை'க் கதவுக்குமேலாக 'ஓ, கர்த்தாவே! என்னை உமதுசமாதானத்தின் கருவியாக்கும்' என்ற அர்ச். பிரான்சீஸ்குவின்செபத்தைச் செதுக்கும்படி பகிரங்கமாக ஆலோசனை கூறியவன் நானே" எனக் கூறலாயினர்.

### ஜெருசலேம் திருச்சிலுவை

ஜெருசெலேம்நகர தச்சர்ஒருவரால் மரங்கொண்டு அப்போது ஓர்சிலுவை செய்யப்பட்டது. அதன்நிறை 176 ருத்தல். கிறீஸ்துநாதர் அறையுண்ட உண்மையான திருச்சிலுவையின் துண்டுஒன்றையும் இது அடக்கியுள்ளது. ஜெருசலேம் திருச்சிலுவையென அறியப்படுகின்ற இந்தச்சிலுவை ஓர்பெரிய வெள்ளிக்கிழமை ஜெருசலேமிலிருந்து நமதுஇரட்சகர் சிலுவைசுமந்துசென்ற பாதைநீளம் கல்வாரிமலையைஅடைந்து அங்கிருந்தும் தனதுஉலகதிருயாத்திரையைத் தொடக்கியது. இது ரோமாபுரியை அடைந்தபோது பரிசுத்தபாப்பரசரால் ஆசீர்வதிக்கப்படலாயிற்று. 1949-ம் ஆண்டு இங்கிலாந்தைத் தரிசித்தபோது, பட்டணத்துக்குப்பட்டணம் இது கொண்டுபோகப்பெற்று லட்சக்கணக்கானமக்களால் வணங்கிப் பக்திசெய்யப்படலாயிற்று. கனடா, ஐக்கிய அமெரிக்கதேசம், மற்றும் தென்னமெரிக்கநாடுகளையெல்லாம் இத்திருச்சிலுவை தரிசித்தபின் தற்போது பெல்ஜியதேச செவெட்ரொக்னிஎனுமிடத்துப் புதியகோவில்ஒன்றிலே தனக்கென்று ஓர்திருசேத்திரத்தைக் கண்டடைந்திருக்கிறது.

# கத்தோலிக்க சமாச்சாரம்

### தியாகஞ்செய்த தேட்டம்

இரண்டாவது உலகயுத்தத்துக்குச் சிலவருடங்களின் முன் இங்கிலாந்திலே டோர்செற்றைச் சேர்ந்த வேமத்பட்டின கத்தோலிக்கர் அங்கே அர்ச். சூசையப்பர்பேரால் ஓர்கோவிலைக் கட்டியெழுப்பத் தேவைப்படும் பணத்துககு வழிகாணுது பெரிதுங்கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தபோது, திரு. சாள்ஸ் வில்சன் என்பவர் அவர்களுக்குத் துணைச்செய்யமுன்வந்து தாம் தேடிவைத்திருந்த தேட்டத்திலே ஓர்பெரும்பகுதியை அவர்களுக்குக் கொடுத்தருளினர். அதற்குப்பதிலாக அவர் தமது வாணுளிலே எஞ்சியிருக்கும் காலத்தில் தமதுசீவனத்துக்குப் போதியதாய் வருடந்தோறும் தமக்கு ஓர்உபகாரப்பணம் உதவவேண்டுமென்று மாத்திரம் கேட்டுக்கொண்டார். இவர்சமீபத்தில் இறந்துபோகவே, அவரின்சொத்தில் எஞ்சியுள்ள 12,000 பவுணுங்கொண்டு அங்கு விக்றெஜிஸ் எனும்இடத்திலே ஓர்புதியகோவில் கட்டப்படவிருக்கிறது. இப்புதியகோவில் வேமத்பகுதியின் நான்காவது கோவிலாகும். இதற்குப்பணம் உதவிய திரு. வில்சன் அவர்களின் விருப்பப்படி, அவரது பாதுகாவலரான அர்ச். சாள்ஸ் பறோமையார்பேராலேயே அது பிரதிட்டைசெய்யப்படவிருக்கிறது.

### கம்யூனிஸ்த அரணின் சரிவு

இத்தாலியிலே பார்மாநகர் கம்யூனிஸத்திற்கு ஓர் அரணுய் இருந்துவந்தது. ஆனல், இந்த அரண் கடந்த சில தினங்களுக்கிடையில் அத்திவாரத்தையே ஆட்டங்கொள்ளச்செய்த பெருந்தாக்குதல்களால் அதிர்ச்சியடைந்து, விரைவிலே அது முற்ருக அடித்துக்கொண்டு விழும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அங்கே கம்யூனிஸ்தகட்சி நிர்வாகசபை அங்கத்தவர்ஒருவரும், கம்யூனிஸ்த வாரசஞ்சிகையின் பரிபாலனரும், கம்யூனிஸ்தசங்கத்தின் முதல்வரும், கம்யூனிஸ்தகருமசாலை அங்கத்தவர்ஒருவரும், கடைசியாகக் கம்யூனிஸ்த கூட்டுறவுச்சபைப் பரிபாலனசங்கத்தின் தலைவர், முகாமைக்காரர், மற்றும் அங்கத்தவர்களுமாக எல்லோருமே தங்கள்பதவிகளை இராசிநாமாச் செய்து, கம்யூனிஸ்தகட்சிக்கு அமைந்துநடக்கும்தங்கள்கட்டுப்பாட்டையும் ஒழித்துவிட்டிருக்கிருர்கள். இன்னும் தொழிலாளர்களின் கூட்டுறவுச் சபைஒன்றும் தொழிலாளர்களின் வர்த்தககூட்டுறவுச்சபைஒன்றும் தங்களுக்குஇருந்துவந்த கம்யூனிஸ்தொடர்புகளை முற்ருகஅகற்றிவிட்டுச் சுதந்திரசமுதாயங்களை அமைத்திருக்கின்றன. இதுவரைகூட்டுறவுச் சபைகள்மூலமே கம்யூனிஸ்தர்கள் அந்நகர மக்களைவசீகரித்துத்தங்கள்எண்ணப்படியெல்லாம் அவர்களை ஆட்டிவைத்து வந்தார்கள்.

### 1,500 கத்தோலிக்க கோவில்கள்

பப்ரிஸ்த புரொட்டெஸ்தாந்த உலகஐக்கியத்தின் அமெரிக்க தலைவரான டக்றர் தியடோர் அடம்ஸ்அவர்கள் சமீபத்திலே இரண்டுவாரகாலம் சோவியற்ருஷியாவைத் தரிசித்துவிட்டுத் திரும்பியதும் அத்தேசத்தில் ஆராதனைவழிபாட்டுக்குத் திறந்துவைக்கப் பட்டுள்ளனவாய் 1,500 கத்தோலிக்ககோவில்கள் இருந்துவருவதாகக் கூறலாயினர். மஸ்கோநகரிலே பிறநாட்டுவாசிகள் குடிவாழும்பகுதியிலே இரண்டுவருடம்அமெரிக்க ஸ்தானிகராலய விசாரணைக்குரவராயிருந்து இவ்வருடஆரம்பத்திலே அங்கிருந்தும்வெளியேறியவரான வண. ஜோர்ஜெஸ் பிசொனெற்றிசுவாமியார் இதனைஅறியவந்ததும் "அவர் கூறுவது முற்றுகவே போலித்தனமான ஓர்கூற்றுகும்; அங்கு சுற்றுப்பிரயாணஞ்செய்கின்ற பிறநாட்டினருக்கெல்லாம் இதற்கென இருந்துவரும் சோவியற் தூதுவர்களின் ஸ்தாபனத்தால் இந்தப்புள்ளிவிபரங்கள் திரும்பத்திரும்பக் கொடுபட்டு வருகின்றன; இரண்டாவது உலகயுத்தத்தின்போது சோவியற்அரசு அடிப்படுத்திக் கொண்ட பால்த்திக்நாடுகளுக்கு வெளியே சோவியற்ருஷியாமுழுவதிலும் நான்கு கத்தோலிக்க கோவில்கள்மாத்திரம் தேவஆராதனைக்குத் திறக்கப்பெற்று ஓர்குருவானவர் சேவைசெய்து வருவதை நான் அறிவேன்; அவைகள் மஸ்கோநகரிலுள்ள பிரான்சிய அர்ச். லூயிஸின் கோவிலும், லெனின்கிருட், கிஷினெவ், ரிபினிஸிஎனும் நகர்களிலுள்ள கோவில்களுமாகும்; டக்றர் அடமஸ்அவர்கள் சோவியற்தூதுவர்களின் ஸ்தாபனம் சொன்னதை மாத்திரம் கேள்விச்செவியர்போல் நம்பி ஏமாந்துபோயிருக்கிருர்"ரெனக் கூறியிருக்கின்ருர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கார்த்திகை

போதுக் கருத்து: தபசு மனப்பான்மை வளரும்படியாக வேண்டிக்கொள்வது.

மிஷன் கருத்து: தென்னமெரிக்க இந்தியர், நீக்ரோவர்மத்தியில் வேதபோதக அலுவல் தடைபடாதிருக்க மன்றாடிக்கொள்வது.

சத்தியவேத
## பாதுகாவலன்
1955-ம் ஆண்டு
ஐப்பசி மாதம் 27-ந் திகதி



### யேசு இராசா

அப்போதுபிலாத்து அவரை நோக்கி: "அப்படியிருக்க நீ இராசாவாயிருக்கிறாயோ?" என்றான். யேசுநாதர் மறுமொழியாக: "நான் இராசாவென்று நீரே சொல்லுகிறீர்" என்றார். "ஆனால், எனது இராச்சியம் இவ்வுலகத்திற்கடுத்ததல்ல." ஆம், அவர் பிறந்தபோது எதிலே வளர்த்தப்பட்டார்? பஞ்சணை மெத்தையில் அல்ல, ஆனால், ஓர் மாட்டுத் தொட்டிலில். இறந்தபோது அவர் எதிலேகிடத்தப்பட்டார்? சொகுசான ஓர் மஞ்சத்தில் அல்ல, ஆனால், பளுவான ஓர் சிலுவைமரத்தில். இவைகளே அவருடையஇராச்சியம் இவ்வுலகத்திற்கடுத்ததல்ல என்பதற்குப் போந்தசான்றுகளாகும்.

ஆயினும் அறிவிற்குறைந்த இராயப்பர் அவரைப்பார்த்து, "நீர் கிறீஸ்துவானவர்; சுயஞ்சீவிய சர்வேசுரனுடைய குமாரன்" என்று அறிக்கையிடுகின்றார். "நான்உம்மோடு மரிக்க வேண்டியதானாலும் உம்மைமறுதலியேன்" என்று அவரையிட்டுத்தானே அறைகூவுகின்றார். விசுவாசங்கொண்ட தோமையாரும்அவரையிட்டுத்தானே ஜெருசலேமுக்குப் போய் அங்கே மரிக்கவேண்டுமென முற்படுகின்றார். இன்னும்எந்த ஒருபுத்தகத்தையுமே ஒருபோதும் எழுதியிராதவர் பன்னிரண்டாம்வயதிலே ஜெருசலேம் தேவாலயத்தில் வேதசாஸ்திரிகள்நடுவில் உட்கார்ந்து அவர்களுக்கு உபதேசிக்கக்கூடியவரானர். அவர்வாக்கைக் கேட்டவர்கள்யாவரும் அவ்ருடைய ஞானத்தையும், மாறுத்தரங்களையும்பற்றிப் பிரமித்துக் கொண்டிருந்தார்கள். அவர் உபதேசித்ததுபோல் எவருமே எக்காலத்திலாவதுஉபதேசித்ததில்லை. வல்லபம்படைத்தஏரோதனையே அவர் "நரி" என்றும் வேதபாரகரையும், பரிசேயரையும்"வெள்ளையடித்தகல்லறைக"ளென்றும் அழைக்கவோ, அன்றேல் தமதுபிதாவின்வீட்டைக் கள்வர்குகையாக்கிய செல்வாக்குள்ளகாசுக்காரரைச்சிறுகயிறுகள்கொண்டு தாம் பின்னிய சாட்டையால் தேவாலயத்திற்கு வெளியேதுரத்தியடிக்கவோ அவர்எட்டுணையும் பின்வாங்கவில்லை.

இன்னும்அவர் பாவிகளுக்கும், விபசாரியான மரியமதலேனளுக்கும், தம்மையே மும்முறைமறுதலித்த இராயப்பருக்கும், நல்லகள்வனுக்கும் இரக்கமேகாண்பித்தார். நல்லாயனுகியஅவர் நீதிமான்களையல்ல, ஆனால், பாவிகளையே இரட்சிக்க வந்தார். ஜெருசலேம் நகரையிட்டுக் கண்ணீர்விட்டழுது, "பட்சியானது கூட்டிலுள்ளதன் குஞ்சுகளை இறக்கையின்கீழ் அணைத்துக் கொள்ளுவதுபோல எத்தனையோமுறை உன் மக்களையும் அணைத்துக்கொள்ள விரும்பினேன்; உனக்கு மனமில்லாமற்போயிற்றே" என்று உணர்த்தினின்றார். இன்னும் அவர் வறியவர்களுக்கும், அகதிகளுக்கும், துன்புற்று வருந்துவாருக்கும் அன்பராயிருந்தார். குஷ்டரோகிகளைக் குணமாக்கியும், முடவர்களை எழுந்துநடக்கச்செய்தும், குருடர்களுக்குப் பார்வையளித்தும், செவிடர்களுக்குக் கேள்வியளித்தும், ஊமைகளைவாய்பேசச்செய்தும், மரித்தவர்களை உயிர்க்கச் செய்தும் எல்லவருக்குமே நன்மைசெய்துகொண்டு போனர். சீவியத்தின் ஊற்றாகிய அவர் நாம் சீவிக்கவேண்டுமென்று ஓர்சிலுவையிலே பயங்கரவேதனைக்குரிய மரணத்தைத் தழுவிக்கொண்டார். "இவ்வுலகத்துக்கடுத்ததல்ல" எனும் திருமொழிகள் உலகசம்பத்துக்களை அற்பமாகக்கொண்டுள்ள மக்களுக்கு எத்துணைபெரும் ஆறுதல் அளிப்பனவாகும். "தரித்திரர்களே, நீங்கள்பாக்கியவான்கள்; ஏனெனில், சர்வேசுரனுடைய இராச்சியம் உங்களுடையது" என்று அவர்களுக்கெல்லாம் திடநம்பிக்கை அளிக்கின்றார். கிறீஸ்து இராசாவின் திருநாளைக் கொண்டாடவிருக்கின்ற இச்சந்தர்ப்பத்திலே "உம்முடைய இராச்சியம்வருக" எனும் திருமந்திரமானது நமது உள்ளத்தைக் கவர்வதாக!

## கிறீஸ்துநாதருடன் * * வசித்திருந்தால்

கத்தோலிக்கரிற்பலர் உண்மையான கிறீஸ்துவவாழ்க்கை நடத்தாதிருக்கின்றனர். தங்கள்திருமறை விதித்திருக்கும் முக்கியமானகடமைகளை அவர்கள் பிரமாணிக்கமாய் நிறைவேற்றுகின்றனர் என்பதுமெய்தான். என்றாலும்,கிறீஸ்துநாதரைப்போல் அவர்கள் ஒழுகுகிறார்கள்என்று சொல்லமுடியாது. அவர்களின் வேதமெல்லாம் கோவிலுக்குப்போகையில் அணிந்துகொள்ளும் உடைபோல்இருக்கிறது. உண்மையாகவே தம்மைப்பின்செல்கிறவர்கள், "உலகின்ஒளியாகவும், பூமியின்உப்பாகவும்" இருக்க வேண்டும்எனக் கிறீஸ்துநாதர் வற்புறுத்தியிருக்கிறார். நம்மவர்களின் நடத்தைக்கும், அவர்களைச் சுற்றிலும்வசிக்கும் அவிசுவாசிகளின் நடத்தைக்கும் வித்தியாசமே இல்லை.

ஆதிகாலத்துக் கிறீஸ்துவர்களுக்கும், நமதுகாலத்துக் கிறீஸ்துவர்களுக்கும் எவ்வளவு வித்தியாசம்! ஜெருசலேமிலும், ரோமை வேதகலாபனைகளின் போதும் வசித்தவர்கள் பெற்றுக்கொண்ட வரப்பிரசாதங்களின்பலம் இன்றும் குறைந்துவிடவில்லை. இஞ்ஞாசியார், செபஸ்தியார், அக்னேஸ், ஆகத்தா, செசிலியாமுதலியோரைத் திடப்படுத்திய விசுவாசத்தின்வல்லமை ஒருபோதும் குறைவதில்லை. அப்படியிருந்தும் இன்று அர்ச்சியசிஷ்டர்களைப் பார்ப்பது அரிதாயிருக்கிறது. அதுமாத்திரமா? கத்தோலிக்கரிடையே பாவங்களும், தீக்குணங்களும் மலிந்திருப்பதினால் கணக்கற்றஆத்துமங்கள் சேதமாவதுடன், பிறர் நமது மறையிற் சேர்வதற்கும் அது பெருந்தடையாயிருக்கிறது.

ஆதிக்கிறீஸ்துவர்கள் உண்மையான கிறீஸ்துவபுண்ணியங்களின் மேல்வரிச்சட்டமாய் விளங்கியதெங்ஙனம்? இதற்கு இருகாரணங்கள். முதலாவது, ஞானஸ்நானத்தின் வழியாகத் தாங்கள் "கிறீஸ்துநாதரில் புதுச்சிருஷ்டிகள்" ஆவதாக அவர்கள் நன்குஅறிந்திருந்தனர். பாவத்தின் பழையமனிதனை அவர்கள்களைந்துவிட்டு நீதியிலும், உண்மையான பரிசுத்ததனத்திலும் சர்வேசுரனுடையசாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதுமனிதனை அவர்கள் தரித்துக்கொண்டார்கள். கிறீஸ்துநாதரைத் தரித்துக் கொண்டமையால், கிறீஸ்துநாதரைப்போல் ஒழுகவேண்டும் என அவர்கள் அறிந்தனர். உலகின் ஒளியாயிருக்க வேண்டும். இருளிலிருந்துஒளி வித்தியாசமாயிருப்பதுபோல், அவிசுவாசிகளின் நடத்தைக்கும், அவர்களின் நடத்தைக்கும் வித்தியாசம் இருக்கவேண்டும். இந்தக் கடமையிலே அவர்கள் தவறினல், அவர்கள் கிறீஸ்துநாதருக்குத் துரோகஞ்செய்தவர்களாவார்கள்.

இரண்டாவது, தங்களுடன் வசித்து நடமாடிவரும் ஒருவராகக் கிறீஸ்துநாதரை அவர்கள் கருதி நேசித்தார்கள். சாவுக்கும், கொடியவேதனைகளுக்கும் அஞ்சாது கடவுளின் நித்தியசுதனுக்குப் பிரமாணிக்கம் தவறாதிருப்பதாக அவர்கள் வாக்களித்தார்கள். அவருடையசமுகத்தில் அவர்கள் சீவித்து, அவரை வந்தித்து, நேசித்தார்கள். அவரிலே தங்களுக்கிருந்த நட்பை அதிகரிக்கச்செய்ய முயன்றார்கள். அவருக்காகக் கொடிய வேதனைப்படுவதையும், உயிரையே விடுவதையும் பெருமையாகக் கருதினார்கள். கிறீஸ்துநாதர்மேல் உயிருள்ள விசுவாசமும், உருக்கமான நேசமும் அவர்களிடம்இருந்தன. இக்காலத்தின் பெருந்தேவைகள் இவைகளே.

உன்ஈடேற்றத்துக்காகப் பாடுபட்டு உயிர்விட்டயேசுவின்மேல் நீகொண்டுள்ள நேசத்தினல் தூண்டப்பட்டு உன்வேதகடமைகளை அனுசரிக்கிறாயா? அல்லது கடவுளுடையவிரோதியாய் நீ மரித்தால் வரவிருக்கும் நித்திய தண்டனைகளுக்குப் பயந்து அவற்றை அனுசரிக்கிறாயா? அநேகர் தங்கள்திருவேதத்தை ஒருபெரும்சுமையாகக் கருதுகிறார்கள்.

ஒருவனை உத்தமகத்தோலிக்கன் ஆக்குவதுஎன்ன? பாவத்தைவிலக்குவது கடினம்என்றாலும் திடமனதுடன் விலக்கவும், கற்பனைகளை அனுசரிக்கவும்அவனைத் தூண்டுவதுஎன்ன? கிறீஸ்துநாதருக்குப் பிரமாணிக்கத்துடன் சேவைசெய்வது இவ்வுலகில்எளிதல்ல. ஏனெனில், மனிதனை நித்தியகேட்டுக் குள்ளாக்கும்படி பிசாசு, உலகம், சரீரம் என்னும் மூன்று சத்துருக்கள் எப்போதும் அணிவகுத்து நிற்கின்றன. புண்ணியவாழ்க்கை நடத்துவதென்றால் நீரோட்டத்தைஎதிர்த்துப் படகைச்செலுத்துவதற்குச் சமம். விடாமல் தண்டுவலித்துக்கொண்டே இருக்கவேண்டும். அநேகர் தங்கள்துர்நாட்டங்கள் என்னும் நீரோட்டத்தோடு செல்லவிரும்புகின்றனர். இதற்கு எவ்வித பிரயாசையும் தேவையில்லை. "பரலோகஇராச்சியம் பலவந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்படுகின்றது. பலவந்தம்பண்ணுகிறவர்களே அதைப் பறித்துக்கொள்கிறார்கள்'' (மத். 11-14). பரித்தியாகங்களாலும், ஒறுத்தல்முயற்சிகளாலும் தங்கள்சுபாவ பாவநாட்டங்களை எதிர்த்துத் தங்கள்மேல் பலவந்தம்செய்கிறவர்களே தங்கள்திருவேதத்தை உண்மையில் அனுசரிக்கின்றனர்.

இலட்சக் கணக்கானபேர் இந்தவிக்கினங்களையெல்லாம் மேற்கொண்டு இப்பொழுது கிறீஸ்துநாதருடன் மோட்சத்தில் அரசாளுகிறார்கள். இதை அவர்கள்சாதித்தது எவ்விதம்? அவர்களிடம் உயிருள்ளவிசுவாசம் இருந்தது. கிறீஸ்துநாதரை அவர்கள் உருக்கமாக நேசித்தார்கள். மனைவிக்குக்கணவன் இருப்பதைவிட — பெற்றோருக்குத் தங்கள்குழந்தையைவிட— நண்பனுக்குத் தன்சிநேகிதனைவிட அவர்களுக்குக் கிறீஸ்துநாதர் மேம்பட்டவராயிருந்தார். அதிக அந்நியோன்னியமாய் இருந்தார். அவர்களுடையநினைவிலும், புத்தியிலும், ஆசையிலும் அவர் விடாதுவசித்தார். தாங்கள் செய்ததையெல்லாம் அவர்கள் அவரிலும், அவருடனும், அவருக்காகவும் செய்தார்கள். அவருக்குப் பிரியமற்றஎதையும் செய்யக்கூடாது; அவருடைய திருச்சித்தத்தையே எப்பொழுதும் நிறைவேற்றவேண்டும். இதுவே அவர்களுடைய ஏக ஆசை. அவரது அளவற்ற அன்பு அவர்கள்கண்முன் எப்பொழுதும் இருந்தது. பதில் அன்புகாட்ட முயன்றுவந்தார்கள்.

அப்போஸ்தர்கள், லாசர், மார்த்தா, மரியம்மாள் ஆகியோரைப்போல் நீ கிறீஸ்துநாதருடன் வசித்திருந்தால் – அவர் உனக்காகமனிதனான கடவுளின் நித்தியசுதன்என்றும், பரகதியில் அவர் உன்நித்திய சம்பாவனையாய் இருப்பார்என்றும் நீ இப்பொழுது அறிவதுபோல, அவருடன் நீ வசித்தகாலத்தில் அறிந்திருந்தால், நீ எப்பொழுதும் அவர்பாரிசமாய் இழுக்கப்பட்டிருப்பாய். அவருககுப்பிரியமற்ற எதையும் நீ செய்யத் துணியமாட்டாய்.

பலஸ்தீன்நாட்டு மக்களுக்குக் கிடைத்த பாக்கியம் உனக்குக் கிடைக்கவில்லை. எனினும், அவருடன் வசிக்கும் பாக்கியம்பெற்றவர்களைப்போல், நீயும் அவரை உன்முழு ஆத்துமத்தோடும், முழுஇருதயத்தோடும், முழுமனதோடும், முழுப் பலத்தோடும் நேசிக்கக் கடமைப்பட்டிருக்கிறாய். இது எப்படி ஆகுமென்று கேட்கிறாயா? இதற்கு உயிருள்ளவிசுவாசம் தேவை. அந்தக்காலத்தில் நீ கிறீஸ்துநாதரை நேருக்குநேர் பார்த்து, அவர்சொன்ன வார்த்தைகளைக் கேட்டிருந்தால் எவ்விதம் ஒழுகியிருப்பாய்? இன்றும் நீ அவ்விதமே ஒழுகவேண்டும். கிறீஸ்துநாதர் செய்தவைகளிலும், சொன்னவைகளிலும் உனக்கு உயிருள்ளவிசுவாசம் இருந்தால் இவ்விதம்ஒழுகுவது எளிதாகும்.

— ஞானத்தூதன்

---

## சதாசகாயமாதா கோணம்

### ''அவமானத்திலும் அழிவிலும்நின்று ஆட்கொண்டதாய்''

இந்தநன்றித்துதியைத் தங்கள் புதினப்பத்திரிகையில் தயவுசெய்து பிரசுரிக்கவும். இதற்கு நானும், எனது இனசனரும் என்றும் நன்றியுள்ளவர்களாக இருப்போம். அன்றியும் சதாசகாயமாதாவின் தொண்டர்கள் தங்கள்பத்தியில் ஸ்திரப்படுதற்கும் இது ஓர்ஏதுவாகுமென்றும் நம்புகிறேன்.

எனதுசகோதரியின் குடும்பத்துக்கு ஏற்பட்ட பாரியஆபத்தின் பாரத்தாற் தாக்குண்டு மனக்கஸ்தியோடு ஆடிமாதம் 13-ந்திகதி புதன்கிழமை நோவனைக்குச் சமுகங்கொடுத்தேன். எனதுசகோதரியின் புருஷன் ஓர்கலகத்தில் உடந்தையாக்கப்பட்டு, குற்றவாளியாகக் காணப்பட்டு, தீர்ப்பு ஆடிமாதம் 18-ந்திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. அதுவரையும் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். சாட்சியம் அவருக்கெதிராக இருந்தமையால் அவருக்குச் சிறைத்தண்டனையே கிடைக்குமென்றும், அதன் பலனாய் அவர் தாம்வகித்த உத்தியோகத்தை இழக்கநேரிடுமென்றும், உத்தியோகம் போகவே அவருடையமனைவியும், நாலு குழந்தைகளும் திக்கற்றவர்களாய்த் தெருவிலேநிற்க நேருமென்றும் எல்லோரும் ஒரேமனதாய்க் கதைத்துக் கொண்டார்கள்.

இந்தக்கலக்கமான நேரத்தில், அங்கலாய்ப்பான வேளையில், உதவிஒத்தாசைபெற ஒரேஒருவழி இரக்கமுள்ள சதாசகாயமாதாவேயன்றி வேறில்லையென முடிவுகட்டிக் கொண்டேன். ஆடிமாதம் 13-ந்திகதி புதன்கிழமை சதாசகாயமாதாவின் பாதாரவிந்தங்களில் ஒருவிண்ணப்பம் சமர்ப்பித்தேன். இந்தஏழைக்குடும்பத்தை அவமானத்திலிருந்தும், அழிவிலிருந்தும், பணமுடையிலிருந்தும் காப்பாற்றும்படி அவளை இரந்துமன்றாடினேன்.

ஆடிமாதம் 18-ந்திகதிவந்தது. நாம் எல்லோரும் ஏங்கியமனத்தோடு கோட்டுக்குச் சென்றோம். தீர்ப்புக்கூறும் நேரம்வந்தது. நீதிவான் ஒருசிறு குற்றத்தண்டனையோடு எனது மைத்துனரை விடுதலையாக்கிவைத்தார். இவ்விதம் சம்பவிக்குமென எவரேனுங் கனவிலும் நினையாதமையால் எல்லோரும் மிகவும்அதிசயவசத்தராயினர். இவ்விதசந்தோஷகரமான முடிவைச் சதாசகாயமாதாவல்லாது வேறு எவரும் பிறப்பித்திருக்க முடியாதென்பது எனதுதிறம்பாத நம்பிக்கை.

ஓ தயாபரமுள்ள தாயாரே! இந்த ஏழைக் குடும்பத்தை உமதுபோர்வைக்குள் வைத்து இன்றுமுதல் பாதுகாத்துக்கொள்ளும். சகலவிதமான ஆத்துமசரீர இன்மைகளிலும்நின்று இரட்சித்துக்கொள்ளும். உம்மிலே நான் வைத்திருக்கும் நம்பிக்கையிற் பிறழாதிருக்கும்வரத்தை எனக்கு எப்போதுந் தந்தருளும். நான் உமக்குக்கிட்டவும், உமதுதிருக்குமாரனுக்குக் கிட்டவும் இருக்கத்தக்கதாக எனக்குவேண்டிய வரப்பிரசாதங்களைத் தந்தருளும். எனதுசகோதரிக்கும், குடும்பத்துக்கும் காட்டியசலுகையை உம்மைநாடி ஓடிவரும் நிர்ப்பாக்கியர் சகலருக்குங் காட்டியருளும். மனஆறுதலைக் கொடுக்கும் உமது மகிமைப்பிரதாபமுள்ளபேரைச் சதாசகாயமாதாவே நாம்என்றும் வாழ்த்திப்போற்ற வரந்தாரும்.

(சீத்துவாவில்வசிக்கும் றிச்சேட் பெறேராஎன்பவர் "நோவனைப்புதினம்" என்னும் ஆங்கிலபத்திரிகைக் கெழுதியனுப்பிய நன்றித்துதியின் தமிழ்ச்சாரம்.)

---

யோசேவாஸ்முனிவர் சரித்திரத்துணுக்குகள்

[11]

# குடமும் மடமும்

யோசேவாஸ் முனிவரில் காணப்பட்ட ஆச்சரியமான குணங்களினால் கத்தோலிக்கரும், பிறசமயத்தவரும் அவரைப் புகழ்ந்தார்கள். கிறீஸ்துவர்களுடைய வீடுகள் புண்ணியங்களில் விருத்தியடைந்து, சந்நியாசிகளின் ஆச்சிரமங்கள்போலாயின. வீடுகளில் செபமாலையின் ஓசையும், தேவஸ்துதிகளின் பாடல்களும் கேட்க ஆரம்பித்தன.

யாழ்ப்பாணத்தை ஆண்டுவந்த என்றீக்குவன்றே என்கிறவன் கத்தோலிக்கரிடையே காணப்பட்ட மறுமலர்ச்சியை மட்டிட்டறிந்தான். யேசுசபையைச்சேர்ந்த ஒருகுருப்பிரசாதி ஒளிவுமறைவாய்த் திரிந்து வேதம்போதிக்கிறாரென்று எண்ணி அவரை அகப்படுத்தத் தனது வல்லமைகள் எல்லாவற்றையும் பிரயோகித்தான்.

கர்த்தர்பிறந்த திருநாளுக்கு முன் இராவில் குருவானவரையும், கத்தோலிக்கர்களையும் பிடிக்கஎண்ணிச் சேவகர்களைப் பலதிசைகளிலும் காவல்புரியுமாறு அனுப்பிவைத்தான். குருவானவர் தப்பியோடக்கூடிய எல்லாவழிகளிலும் காவல்காரர்கள் நிறுத்தப்பட்டார்கள். அன்று இராத்திரி கிறீஸ்துவர்கள் மூன்றுவீடுகளில் பீடங்கள் அமைத்துச் செபமாலைசொல்லிப் பிரார்த்தித்துக்கொண்டிருந்தபோது, சேவகர்கள் திடீரென உட்பிரவேசித்து, அங்கங்கு கூடியிருந்த முன்னூற்றுக்கதிகமானோரைப்பிடித்துக் கொடுமையாய் அடித்துப் பீடங்களை உடைத்துத் திருச்சுரூபங்களையும் அனாசாரம் செய்தார்கள். இந்தஅக்கிரமங்களினால் வேதவிசுவாசத்தில் உறுதிபூண்டிருந்த எட்டுப்பெரியார் உயிரிழக்க வேண்டியதாயிற்று. (யோ. மு. சரி. 72-ம் பக்.)

யோசேவாஸ்முனிவரைச் சல்லடைபோட்டுத் தேடியும் அவர்களால் அகப்படுத்த முடியவில்லை. சர்வேசுரன் அநேகஆத்துமங்களின் ஈடேற்றத்துக்காக அவரைக் காத்துவைக்கத் திருவுளமானார். என்றீக்குவன்றே என்கிறவன் கோபத்தால் கொதித்து நாள்தோறும் கிறீஸ்துவர்களுக்குத் துன்பம்செய்துவருகிறதைக்கண்டு, இனியும் இங்கிருந்தால் கிறீஸ்துவர்களுக்கு ஆபத்து அதிகமாகுமென்று உணர்ந்து யாழ்ப்பாணத்தை விட்டுநீங்க எண்ணினார்முனிவர்.

அக்காலத்தில் யோசேவாஸ் முனிவர் சில்லாலையில் சீவித்தபோது தமக்கு அருந்துணைபுரிந்த (கோவிலுக்கு அருகாமையில் குடியிருந்த) அன்னே "Anne" என்னும் புண்ணியவதிக்குத் தாம்வேறிடம்செல்ல நிச்சயித்துள்ள கருத்தைத்தெரிவித்து, "நான் உமக்குச்செய்யக்கூடிய கைம்மாறு ஏதுமுண்டோ?" என்று கேட்டார்.

அவள் மனம்நொந்து அழுது அந்தஅருமைக்குரவரால் தன் ஊராரும், மற்றோரும் அடைந்துகொண்ட சகாயங்களை எண்ணிக் கண்ணீர்விட்டுப் புலம்பினாள். தேவதிரவிய அநுமானங்களைக் கொடுக்கவும், திவ்வியபூசைசெய்யவும், வேதவிருத்தியில வளர்க்கவும் இனி யார் வரப்போகிறார் என்றெண்ணியபோது அவள் இருதயம் நீராயுழிந்துருகிற்று. "பிதாவே, என்வீட்டில் குறைவற்ற புத்திரபாக்கியத்தையும், நிறைவான சோற்றுச்செல்வத்தையும் ஈந்து என்னையும், என் பிள்ளைகளையும் ஆசீர்வதியும்'' என்று அவருடைய பாதங்களில் வீழ்ந்தாள். அவரும் அவ்வாறே ஆசீர்வதித்துப் பிச்சைக்காரன் உடையை அணிந்துகொண்டு தன்னைப்பிரியாத யுவாம்என்ற சீஷனோடு பிரயாணமாயினார்.

மேலேகுறிப்பிட்ட புண்ணியவதிக்குச் சுவாமியார் ஒருமண்குடத்தை எடுத்து ஆசீர்வதித்துக் கொடுத்ததாகச் சில்லாலையில் கர்ணபரம்பரை வரலாறு ஒன்றுண்டு. இருநூறு ஆண்டுகளுக்கதிகமாய்க் காப்பாற்றப்பட்டுவந்த அக்குடம் உடைந்து துண்டுகளாய்ப் போய்விட்டாலும் இன்னமும்சிலர் அத்துண்டுகளைக் காப்பாற்றி வருகிறார்கள். அன்னேஎன்ற புண்ணியவதி வசித்த இல்லத்தில்தான் இப்பொழுது கன்னியர் மடம் கட்டப்பட்டிருக்கிறது புண்ணியவதிகேட்டவாறு அவ்விடம் புத்திரர்களாலும், புத்திரிகளாலும் நிரம்பியிருப்பதை நாம் காணுகின்றோம்.

— அமுதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "கிறீஸ்துநாதரில் ஒன்றாக"

இற்றைக்கு இருவருடங்களின்முன் புறொட்டெஸ்தாந்த கன்னிகாசபை ஒன்று ஜேர்மனியில் பவேரியநாட்டைச்சேர்ந்த நீடர்அல்ரைஷ் எனுமிடத்திலுள்ள ஆசீர்வாதப்பர்சபைச் சந்நியாசஆச்சிரமத்துக்கு ஓர் மெழுகுவர்த்தியை உபகரித்தது. அதனைத்தாங்கியுள்ள தண்டிலே சோவியற்கிழக்கு ஜேர்மனியிலுள்ள புறொட்டெஸ்தாந்த இளைஞர்குழுவொன்றால் "எல்லாம் ஒன்றாகும்படியாக" எனும்வார்த்தைகள் செதுக்கப்பட்டிருந்தன. திருச்சபையைவிட்டுப் பிரிந்திருக்கும் ஏனைய கிறீஸ்துவசபைகள் அதனுடன் ஐக்கியப்படுமாறு ஒப்புக்கொடுக்கப்படுஞ் செபங்களின் ஓர்சின்னமாக ஒவ்வோர்வியாழக்கிழமையும் இந்தமெழுகுவர்த்தி அந்தச்சந்நியாச ஆச்சிரமத்தின் ஆலயத்திலே எரிக்கப்பட்டுவருகிறது.

"வியாழக்கிழமை மெழுகுவர்த்தி" எரிக்கும்வழக்கம் ஏற்கனவே பலவிடங்களிலும் பரவத்தொடங்கிவிட்டது. அங்குஎரிவதையொத்த மெழுகுவர்த்தி ஒன்று றோமாபுரி, சம்பேதுருவானர் மகாலயத்தில் ஒவ்வோர்வியாழக்கிழமையும் எரிகின்றது. மற்றோர்மெழுகுவர்த்தி இங்கிலாந்திலே காஷ்டம்எனுமிடத்திலுள்ள அங்கிளிக்கன்சந்நியாச ஆச்சிரமத்தில் எரிகின்றது. ஏனையவைகள் மெக்சிக்கோவிலும், தென்னாபிரிக்காவிலுமுள்ள மிஷன் நிலையங்களில் அமைந்துள்ளகோவில்களில் எரிகின்றன. நீடர்அல்ரைஷ் எனுமிடத்துச் சந்நியாசஆச்சிரமமானது ஜேர்மனியிலே "ஒரு பரிசுத்தமான" எனும் இயக்கத்தின் மத்தியதானங்களில் ஒன்றாகத் திகழ்கின்றது. அதன் வெளிவாயிற்கதவிலே "கிறீஸ்துநாதரில் ஒன்றாக" எனும் ஹெய்பெல்டர் மடாதிபரின்விருதுமொழி பொறிக்கப்பட்டிருக்கின்றது இக்கஇயக்கத்திலே ஓர் முன்னோடியான ஹெய்பெல்டர்மடாதிபர் தமதுசந்நியாச ஆச்சிரமத்தின்சிறகு ஒன்றைக் கத்தோலிக்ககுருமாரினதும், புறொட்டெஸ்தாந்தபாதிரிமாரினதும்ஆலோசனைக்கூட்டங்களுக்கென்று "சபைகூடுஞ்சாலை"யாகச் சமீபத்திலே புறம்பாக ஒதுக்கிவைத்திருக்கின்றார்.

"ஒரு பரிசுத்தமான" எனும் இயக்கமானது இற்றைக்கு ஏறக்குறைய 30 வருடங்களின் முன்னர் வண. மாக்ஸ் யோசெவ் மெற்ஸ்கர் சுவாமியாரால் ஆரம்பிக்கப்பட்டது. இவர் 1944-ம்ஆண்டு நாஸிகளால் கொல்லப்படலாயினார் கிறீஸ்துவஉலகம் பிளவுபட்டிருக்கக்காரணம் இன்னதென்பதை மனவொற்றுமையாகக் கண்டறிவதற்கும், இறுதியில் அதன் ஒற்றுமைக்கானவழியைச் சித்தஞ்செய்வதற்குமாக ஜேர்மனியிலே கத்தோலிக்க, லுத்தேர் சபைகளைச்சேர்ந்த குருமார், பாதிரிமார், சாதாரணகிறீஸ்துவர்களால் செய்யப்பட்டுவரும் ஓர்பிரயத்தனம் இதுவாகும். "ஒருபரிசுத்தமான" எனும்இயக்கம் ஜேர்மன் அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமாரால் அங்கீகரிக்கப்பெற்றதாகும். கிறீஸ்துவ உலகின் ஐக்கியத்துக்காக உலகமுழுவதும் பரவப்போகும் செபப்படையின் சின்னமாக "வியாழக்கிழமை மெழுகுவர்த்தி" இயக்கம் உண்டாகுமென நம்பப்படுகிறது.



# பல தேசங்களில்

### ஹிற்லரின் எரிக்கப்பட்டசடலம்

1945-ம் ஆண்டு சித்திரைமாதம் 30-ந் திகதியன்று தற்கொலை செய்துகொண்ட ஹிற்லரதுபிரேதத்தின்மேல் ஓர்போர்வையைஎறிந்து அதுஎரிவதற்குத் தான்உதவிசெய்ததாக ருஷிய சிறையிலிருந்து விடுதலைபெற்றுப் பேர்லின்நகருக்குத் திரும்பிவந்துள்ள அவரின்சேவகரான திரு. ஹெய்ன்ஸ் லிஞ்சேஎன்பவர் தெரிவித்திருக்கின்றார். ஹிற்லரின்பிரேதத்தைத் தூக்கிச்செல்லத் தான்எத்தனித்ததாகவும், அது மிகவும்பாரமாய் இருந்தமையால் தூக்கமுடியாமற் போகவே, அவரின் கார்ச்சாரதி தனக்குத் துணைசெய்ததாகவும் இவர்கூறியிருக்கின்றார். ஹிற்லருடையவும், அன்றே அவர் மணஞ்செய்துகொண்ட அவரதுகாதலி ஈவா புறானுடையவும் பிரேதங்கள் பெற்றோல்ஊற்றி எரிக்கப்பட்டனவென்றும் இவர் தெரிவித்துள்ளனர். ஹிற்லர் தற்கொலைசெய்துகொண்டதைக் கண்ணாரக்கண்டமூவருள் இவரும்ஒருவர்.

### "நல்லசமாரித்தன்"

அன்றொருநாள் கார்ஒன்று வறியவர்களின் சின்னக்கன்னியாஸ்திரிமார் ஐவரை ஏற்றிக்கொண்டு லண்டனிலிருந்து பர்மிங்காமுக்குச் செல்லும் வழியிலே, பர்மிங்காமுக்குச்சமீபமாகச் சேதமடைந்துநின்றுவிட்டபோது அவ்வழியாகக் கார்ஒன்றிலே சென்ற ஒருவர் அவர்களையும், அவர்களின் பயணச்சாமான்களையும் தமது சொந்தக் காரில் ஏற்றிக்கொண்டு அவர்கள் போகவேண்டிய இடமாகிய அர்ச். சூசையப்பர் கன்னிகாமடத்திற் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டார். பின்பு சேதமடைந்த அவர்களுடைய காரை இழுத்துச்சென்று, திரும்ப அவர்கள் பயணஞ்செய்யத்தக்கதாய் நேரகாலத்துடன் அதைப்பழுதுபார்த்துக்கொடுப்பதற்கும் ஒழுங்குசெய்தார். பிந்தக் கன்னியாஸ்திரிமார் அவரை இன்னாரென்று அறிந்துகொள்ள முயன்றபோது, தமதுபெயரை அந்தரங்கமாகவைத்துக்கொள்ளும்படி அந்தப்பரோபகாரி கார் பழுதுபார்க்குமசாலையிலுள்ளார்க்குக் கற்பித்துப் போனதாக அறிந்துகொண்டார்கள்.

### உயிர்வாழும் எலும்புக்கூடு

சீனதேச லாவோஹொக்கோநகரின் பெறோனிமேற்றிராணியார் அந்தோ! ஓர்மனுக்கோலமாக அல்ல, ஆனால், உயிர்வாழும் ஓர்எலும்புக்கூடாக அன்றுசனிக்கிழமை ஓர்பிரித்தானிய பொலிஸ்அதிகாரியாலும், ஓர்குருவானவராலும் கம்யூனிஸ்தசீனாவின் எல்லையினூடாகக் ஹொங்கோங்தீவுக்கு நடத்திக் கொண்டுபோகப்பெற்றார். தமது 63 வயதிற்குப்பதில் 90 வயதுடையவராய் அவர் காட்சியளித்தார். சிறிதுவேளையின்பின் ஆஸ்பத்திரியிலே அவர் சித்தப்பிரமையுற்றிருந்தபோது "என்மனதை நீங்கள் மாற்றமுடியாது; எனதுஎண்ணங்களை நீங்கள் மாற்றமுடியாது"என்று முணுமுணுத்தனர். பிரான்சீஸ்கன் சபையைச்சேர்ந்த "இந்த மேற்றிராணியார் சீனஎல்லையைத் தாண்டி நடந்துசெல்ல முடியாதவர், கவன"மென்று சீனக்கம்யூனிஸ்த அதிகாரிகள் ஹொங்கோங்கிலுள்ள பிரித்தானியஅதிகாரிகளை எச்சரித்திருந்தனர். சீனஎல்லைக் கூடாகவுள்ள பாலத்திலே அவர் முன்சரிந்துவிழுந்து பாலத்தின் கிறாதிக்கம்பியைப் பற்றிக்கொண்டார். உடனே ஹொங்கோங்கின் பொலிஸ்தலைவர் ஏ. எல். கோர்டன் அவர்களும், வண. அம்புறோஸ் கொலெற்றிசுவாமியாரும் ஓடிச்சென்று அவருக்குத் துணைசெய்தார்கள். அவருடைய கைகளும், கால்களும் தடிகளைப்போன்று மெலிந்திருந்தன. 98 றாத்தல்தானும் நிறையுடையவராய் அவர் இருக்கவில்லை. கடந்தமூன்றுமாதங்களிலும் அவர் முற்றும்தனிமையாகச் சிறைவைக்கப் பட்டிருந்தபோது அணிந்திருந்த கைவிலங்குகளின் அடையாளங்களை அவரதுமணிக்கட்டுகள் கொண்டிருந்தன. அம்புலன்ஸிலே அவர் ஹொங்கோங்கிலுள்ள சென்தெரேசா ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டார். 1952-ம் ஆண்டுதண்டனைக்குள்ளான பெறோனிமேற்றிராணியார் தாம்செய்தறியாத "குற்றங்"களை அறிக்கையிடுமாறு தாம்சிறைவாசஞ்செய்த காலமுழுவதும் கம்யூனிஸ்தர்களால் நெருக்கியடித்துக் கேள்விகள் கேட்கப்பட்டுவந்தும், அவர் எதுவுஞ்சொல்ல மறுத்துவிட்டார். இத்தாலியிலே றிக்னானோநகரில் பிறந்தஅவர் 1922-ம் ஆண்டு சீனாவுக்குச்சென்று, 1932-ம்ஆண்டு லாவோஹொக்கோநகர் மேற்றிராணியாராயினர்.

### பெறோனின் சிறைவாசம்

ஆர்ஜென்ரீனாவின் நாடுகடத்தப்பட்ட முன்னைநாள் ஜனாதிபதியான ஜெனறல்ஜுவான் பெறோன் பரகுவே நாட்டிற்போய் அடைக்கலம்புகுந்தார் அல்லவா? தற்போதுஇவர் பரகுவே நாட்டின் தலைப்பட்டணமாகிய அசன்சியன்நகரிலிருந்து 75 மைல்தூரத்திலுள்ள வில்லாறிக்கா பட்டினத்திற்குச் சமீபமான ஓர்இடத்திலே சிறைவாசஞ் செய்பவர்போல் தனிவாசஞ்செய்யுமாறு கொண்டுபோய் விடப்பட்டிருக்கிறாரெனச் செய்திகிடைத்திருக்கிறது. நாட்டின் அமைதிக்குப் பங்கமாயிராவண்ணம் ஆர்ஜென்ரீனாவின் எல்லையிலிருந்து போதியளவுதூரமான ஓர் இடத்திற்கொண்டுபோய் அவரைக் காவலில்வைக்கவேண்டுமென்று ஆர்ஜென்ரீன அரசாங்கம் முறைமைப்படி பரகுவேஅரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டது. தனக்குப்பதிலாகவந்த ஆர்ஜென்ரீன அரசாங்கத்தைத்தாக்கிப் பத்திரிகைநிருபர்ஒருவருக்கு அபிப்பிராயம் தெரிவித்ததின்பேரிலேயே ஆர்ஜென்ரீனஅரசாங்கம் அவ்வாறுகேட்டுக்கொண்டது. நிற்க, இத்தாலிய–சுவிற்சர்லாந்த எல்லையிலே மக்கியோர் வாவியின் கரையிலுள்ள ஓர்மனையைத் தனக்குவாங்கித்தருமாறு மிலான்நகரிலுள்ள தனதுநண்பர்ஒருவருக்கு ஜெனறல்பெறோன் அதிகாரங்கொடுத்துத் தந்திச்செய்தி அனுப்பியிருப்பதாக இத்தாலியபத்திரிகைஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

## கூன், குருடு, நொண்டி, செவிடர், ஊமை பிறப்பது எதாலே!

தலையங்கத்தைக்கண்டதே அநேகருக்கு ஒருயோசனைபிறக்கும். அதாவது, சிலமாதங்களின்முன் ஓடிய ஒரு படத்தின்எண்ணம் வரக்கூடும். அதில் ஓர் ஏழை முன்சொன்ன அடிகளைப் பாடுகிறான். ஆனால், இதை இங்கு குறிப்பிடுதற்கு ஓர்காரணம் உண்டு. கடவுளின்செயல்களை எந்தமனிதனும் அளவிடமுடியாது அல்லவா? அவரின்றி அணுவும்அசையாது. ஆகவே, அவர்படைப்புகளை எவ்விதத்திலாவது குறைகூறவோ, அவற்றிலே குறைபிடிக்கவோ கூடாது. நாம் அவயவக்குறைவான மனிதரைக் காணும்பொழுது எமதுஉள்ளத்தில என்னஎண்ணம் உதிக்கிறது? இவர்களை ஏன் இறைவன்படைத்தார் என்றுதானே. அநேகர் இப்படித்தான் எண்ணுவார்கள். ஆனால், கடவுள் இவர்களைக்கொண்டு உலகமக்களை உணரச்செய்யும் உண்மைஎன்ன? அதை ஈண்டுகவனிப்பது நன்று.

முதலில், அங்கக்குறைவுபடாத மனிதரை எடுத்துஆராய்வோம். மனிதன் கடவுள்கொடுத்த கண்களினாலே எத்தனையோ கொடியபாவங்களைக் கட்டிக்கொள்ளுகிறான். பார்க்கத்தகாத எத்தனையோ புத்தகங்களையும், படங்களையும், காட்சிகளையும் பார்க்கிறான். அவரை — தன்னைப்படைத்தவரை ஏற்றிப் போற்றித்துதிக்க, அவரின் சாயலைத் தன் அயலானிடம் எப்போதுங்காண, அதனால் அயலானைநேசிக்க, கடவுளுக்கு மகிமைஉண்டாக்க வேண்டிய மனிதன் பாவத்தினாலே அவரை வெறுப்பதற்குத் தன்கண்களைப் பயன்படுத்துகிறான். கண்இருந்தும் குருடனைப்போன்று நடமாடுகிறான் அல்லவா? தனதுநாவினால் அவன்செய்யும் கொடுமைகள் எம்மாத்திரம்? ஆபாசப் பேச்சுகள், அவலாதிகளைப் பேசுகிறான். கடவுள்இல்லைஎன்று சாதிக்கிறான். அவர் திருவேதத்தை நிந்தித்தும் வருகிறான். எத்தனை பொய்களைச் சொல்லுகிறான். கடவுளைச் சேவிக்க வேண்டிய நாவல்லவா அது? அவருடைய திருமொழிகளை உலகறியச் செய்யவேண்டிய நாவல்லவா அது?

தனதுசெவிகளால் சர்வேசுரனின் வார்த்தைகளைக் கேட்கவேண்டிய மனிதன் சததுராதிகள், வஞ்சகர்கள் முதலியோருக்குச்செவிகொடுக்கிறான். மனிதன் பரிசுத்தமானவைகளைக் கேட்கும்படியல்லவா கடவுள் அவனுக்குக் காதுகளைக்கொடுத்தார்? அவனுக்குக் கைகளைக்கொடுத்தார், அவரைக் கும்பிட அல்லவா? கால்களைக்கொடுத்தார். அவன் அவரை அடிபணிந்து வணங்க வேண்டாமா? அவ்வாறு அவன் தனது மதிகெட்ட நடத்தைகளாலே இந்தக் கொடைகளைஎல்லாம் அவன் புறக்கணித்து வருகிறான்.

ஆகையாற்றான் உலகில் சிலசிலகுறைபாடுகளுடன் மனிதரைப் படைத்துவிடுகிறார் கடவுள். மனிதன் இதை உணருகிறானா? கண்இல்லாதார் படும் பாட்டை எவர்தான் அறியமாட்டார்கள்? நாமும் இப்படிப் பிறந்துவிட்டால் எமதுகதிஎன்ன? உலகம்எங்களைத் தள்ளிவைக்கும். இன்பத்தை அனுபவிக்கமுடியாது தவிப்போம். நமக்கு இந்த அங்கக்குறைபாடுகளை நீக்கி, நாம் உலகில் நடமாடும்படி வைத்த கடவுளை நாம் எவ்வளவாகப்

(அடுத்த பக்கம் பார்க்க).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றவேண்டும். அவருக்கு இந்த அவயவங்களால் செய்யவேண்டிய ஸ்துதிகளைச்செய்ய நாம்பின்வாங்கலாமா? சர்வவல்லப, எல்லாம்நிறைந்த கடவுளுக்கு அற்பமனிதர்செய்யும் புகழ்ச்சிகள்யாவும் ஒருபொருட்டல்ல.

உலகில் குருடும், ஊமையும், செவிடும், முடமுமாக எத்தனையோபிறவிகளைக்கண்டு நாம் மனம்இளகி விடுகிறோம். ஆனால், பின்னர் அவர்களைப் பற்றி எள்ளளவும் சிந்திப்பதுண்டா? நாம் இத்தகைய குறைபாடுகளோடு படைக்கப்பட்டிருந்தால் எத்தகைய துன்பத்தை அனுபவிப்போம்? அதனால், கடவுள் அப்படிஎம்மைப் படையாதுவிட்டதற்காக நாம்எவ்வாறு நன்றிகூறுவது? நமதுஉள்ளங்களில் இப்படியான உணர்ச்சிகளை உண்டுபண்ணுவதற்கும், நமக்கு ஓர்படிப்பனையாய் இருக்கவுமே அவர் அவயவக் குறைபாடுகளுள்ள பிறவிகளைப் படைக்கிறார். என்றாலும் இதைக் கண்டுங் காணாமலே மனிதன் கெட்டுப்போகிறான். உலகம் பாழாயேபாழாய்ப் போய்க்கொண்டிருக்கிறது. பாவஅந்தகாரமென்னும் இருள் உலகில்முன்னொருபோதுமில்லாதவாறுபற்றிப்படர்கிறது. அக்கிரமங்களாலே மனிதவர்க்கம் கெட்டழிகின்றது. அதனால், அளவில்லாத நீதிஉள்ள கடவுளின் கோபம் அதிகரித்து வருகின்றது. ஆதலால், அவரது படைப்புகளாகியநாம் பாவவழியை விட்டுவிலகி அவரைச் சாந்திப்படுத்த முயலுவோமாக.

"யோபு"

---

வடமராட்சிப்பகுதிச்

## சங்கீதவிழா

இது சென்ற 15-10-55 சனிக்கிழமைமாலை பருத்தித்துறைப் புதியகத்தோலிக்கபாடசாலையில் வடமராட்சிப் பகுதிச் சங்கீதவிழாச் சங்கத்தால் சிறப்பாக நடத்தப்பெற்றது. இவ்விழாவில் 27 பாடசாலைகள் பங்குபற்றின. விழா முடிவில் பருத்தித்துறை சென்தோமாஸ் கத்தோலிக்கபாடசாலை "வானவில்வர்ணம்" என்றநடனத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளது. இப்பகுதியிலே சென்ற ஆனிமாதம்நடைபெற்ற சுகாதாரவிழாப் போட்டியிலும் இப்பாடசாலை சுத்தம், நடனம் என்பவற்றிலே முதலிடம்வகித்து வெள்ளிக்கிண்ணமும், மற்றும்பரிசில்களும் பெற்றுள்ளது. அத்துடன் வடமராட்சியிலுள்ள 75 ஆங்கில, தமிழ்ப் பாடசாலைகளிலும் சுகாதாரசேவையில் இது ஓர் "மாதிரிப்பாடசாலை" யாகத் திகழ்கின்றதுஎன்பதும் ஈண்டுகுறிப்பிடத்தக்கது.

— நிருபர்.

---

## நன்றி

உண்மைநன்றி மனிதரிடம் அபூர்வம். தேவனைச்சார்ந்த காரியங்களிலென்ன, மனிதருடன் புழங்கும் பொழுதென்ன கிடைத்தநன்மையைக் கீழ்நோக்குவது அல்லது நன்றியறிந்திருக்க வேண்டியதில்லையென்று மனிதர்சாதாரணமாய் நினைக்கிறார்கள்.

தன்நயங்கருதாச் சேவைசெய்பவர்கள் இதைநன்கறிவர்.

உண்மைநன்றியைத் தெரிவிப்பது மனங்களைக்குளிரச் செய்யும்.

# வத்திக்கான் சோதிடோப்பரிகை

ரோமைநகரிலிருந்து ஏறக்குறைய 20 மைல் தூரத்திலே அல்பான்குன்றுகளில் அமைந்துள்ள காஸ்தெல்கான்டல்போவில் இருந்துவருகின்ற பாப்பரசரது வேனிற்காலமாளிகையின் மேல்மாடிகளுக்கு நேர்மேலாகவுள்ள கூடங்களிலே யேசுசபைக் குருமார்ஐவர் சஞ்சரித்திருந்து வருடமுழுவதும் வானமண்டலத்திலே தங்கள்சிந்தனையைச் செலுத்திவருகின்றார்கள். வத்திக்கான்சோதிடோப்பரிகை — அதாவது சோதிமண்டல அவதான நிலையத்தைச்சேர்ந்த வானசாஸ்திரிகளான இவர்கள் வருடக்கணக்கிலே செய்துவரும் வேலையாதெனில், கோடிக்கணக்கான மைல் தூரத்திலுள்ள "மாற்றமடையும்" நட்சத்திரங்களை ஆகாயமண்டலத்திலே அளவிட்டறிந்து படம் வரைதலேயாகும். இந்தப் பணியானது இற்றைக்கு ஏறக்குறைய 60 வருடங்களின் முன்னே பரீஸ்நகரிலுள்ள சர்வதேச வானசாஸ்திர ஐக்கிய சங்கத்தால் வத்திக்கான் சோதிடோப்பரிகைக்குக் கையளிக்கப்படலாயிற்று. சமீபத்திலே அவர்கள் இந்தப்பணியைப் பூர்த்திசெய்து தாங்கள் கண்டறிந்தவைகளையெல்லாம் மூன்றுதொகுதிகளாகப் பிரசுரித்து வெளியிட்டபோது உலகவிஞ்ஞானிகள் அவற்றையிட்டுப் பெருமகிழ்ச்சி காட்டினார்கள். அம்மூன்று தொகுதிகளிலும் கடைசியானது, வானசோதிகளின் ஓர் வித படப்புத்தகமே. இதனை விஞ்ஞானிகள் விசேஷ பெருமகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார்கள். அதிலே கொடுபட்டுள்ள சிலநாமங்களில் "விளக்கமான", "சோபையான", "ஆவசியகமான" என்பன சிலவாகும். "மாற்றமடையும்" நட்சத்திரங்கள் சீதோஷ்ணநிலையிலும், பிரபையிலும் மாற்றமடைவனவாகும்.

வத்திக்கான் சோதிடோப்பரிகையைச்சேர்ந்த குருவான சாஸ்திரிகள் பிரபையில்ஏற்படும் மாற்றத்தையும், அதற்குள்ள நேரகாலத்தையும் அளவிட்டு, இதிலிருந்து பூமியுடன் சம்பந்தப்பட்டுள்ள நட்சத்திரங்களின்நிலைமையை அளவிட்டுக் கொள்ளுகிறார்கள். அவர்கள் இவ்விதம் அளவிடும்போது அந்தந்தநட்சத்திரம் என்னஎன்ன இரசாயனப்பொருள்கள், உலோகப்பொருள்கள்கொண்டு உண்டாக்கப்பட்டிருக்கிறது என்பதையும் கண்டுபிடிக்கின்றார்கள். இந்தஆராய்ச்சிக்கென்று அவர்கள் சோதிமயமாகவிளங்கும் சாதனங்கள் பெருந்தொகையாக அமைந்துள்ள வானபௌதிக இரசாயன ஆராய்ச்சிச்சாலைகளைக் கொண்டிருக்கிறார்கள். இவற்றைக்கொண்டுநடத்தும்ஆராய்ச்சியின்போது, ஒளியின் அம்சங்களைப் பிரிப்பதாகிய திரிபுசக் கண்ணாடி (கிரகசாயதம்) ஒன்றின்மூலம் நட்சத்திரத்திலிருந்து ஒளியைஅனுப்பிவைக்கக்கூடியதாகின்றது. இதனால்ஏற்படுவதெல்லாம் புகைப்படம் பிடிக்கப்பட்டு, அதிலுள்ளஒளியின் அம்சங்கள்தொடர்ச்சியான ரேகைகளாக நிபுணர்களுக்குக் காட்சியளிக்கின்றன. இந்த ரேகைகள் மூலாதாரமான முக்கியஅம்சங்களை வெளிப்படுத்துகின்றன.

உலகின் மிகப்புராதனமானதென நம்பப்படுகின்ற வத்திக்கான் சோதிடோப்பரிகை ஓர் ஆஸ்திறேலிய யேசுசபைக்குரவரான வண. டேனியல் ஓ'கொனெல் சுவாமியவர்களது தலைமையிலே இருந்துவருகிறது. சென்றமகாயுத்தம் நடந்தகாலத்திலே ஐக்கியஅமெரிக்க தேச அரசாங்கம் பூகம்பம்நிகழும்இடங்களைக் கண்டறிவதிலே இவரின்உதவியைப் பெற்றுக் கொண்டது. அநேக தரிசகர்கள்சென்று இந்தச்சோதிடோப்பரிகையைப் பார்வையிட்டுவருகின்றார்கள். இவர்களிற்சிலர் கத்தோலிக்கர் அல்லாதவர்கள். கத்தோலிக்கதிருச்சபை "விஞ்ஞானத்தின் விரோதி"யென்று எப்போதுமே இவர்கள்நம்பிவந்தவர்கள்.

---

● தற்போது குருப்பட்டத்துக்கு ஆயத்தஞ்செய்துவருகின்ற ஜப்பானிய மாணவர்கள் 754 பேர். இவர்களிலே 438 பேர் பங்குவிசாரணை வேலைக்கென்று சித்தஞ்செய்யப்படுகிறவர்கள். 316 பேர் சந்நியாசசபைகளிற்சேர்ந்து தொண்டாற்ற எண்ணியுள்ளவர்கள். தற்போதுஜப்பானிலே ஜப்பானியகுருமாராய் 279 பேர் இருந்துவருகின்றார்கள்.

● அயர்எனப்படும் சுதந்திர அயலாந்தின் பிரதமரான திரு. ஜோண் கொஸ்ரெல்லோஅவர்கள் சமீபத்திலே காஸ்தெல் கான்டல்போவில் பரிசுத்த பாப்பரசரின் அந்தரங்கபேட்டிஒன்று அருளப்படலாயினர். பாப்பரசர்சென்ற மாரிகாலத்திலே ஆபத்தானநோய் கண்டபிறகு இதுவரைஅருளிய அதிகம்நீடித்த அந்தரங்க பேட்டிகளில் இதுவுமொன்றாகும்.

மட்டக்களப்பு

## தாண்டவன்வெளித் தபால்

பாத்திமாமாதா புதியயாத்திராலயத் திறப்புவிழா :—மட்டக்களப்பு, தாண்டவன்வெளிப் பரிசுத்தவியாகுலமாதா கோயில்வளவில் அமைக்கப்பட்ட பாத்திமாமாதாவின் புதியயாத்திராலயத் திறப்புவைபவத் திருச்சடங்கு சென்ற 15-10-55 சனிக்கிழமை திரிகோணமலை மேற்றிராணியாரான மகாவந். இக்னேஷஸ் கிளென்னி ஆண்டவரால் நிறைவேறியது. கட்டளைக்குரவர் வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக் சுவாமியவர்களினதும்,பங்குக் கிறிஸ்துவர்களினதும் அயராஉழைப்பினால் அவர்களுக்குக்கிடைத்த பொக்கிஷம் இதுவாகும். ஏன், திரிகோணமலை மேற்றிராசனத்துக்கே யென்றும் கூறிவிடலாம். வண. கட்டளைக்குரவர் ஆற்றியசொற்பொழிவிலே, அன்று தினம் இப்பங்கின்சரித்திரத்தில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்படவேண்டிய ஓர்நன்னாளென்று வாழ்த்தினார். சனிக்கிழமைபிற்பகல் 5-30 மணிக்குக் கீழ்மாகாணத்தின் தென்பகுதியிலுள்ள பங்குக்குருமார், மற்றும்குருப்பிரசாதிகள், சந்நியாசிகள், கார்மேல்கன்னியர்கள், வறியோரின் சிறியசகோதரிகள், பங்குக்கிறிஸ்துவர்களாலும், ஏனையோராலும் மேற்றிராணியாண்டவர் வாத்திய வரிசைகளுடன் வரவேற்கப்பெறவே, கட்டளைக்குரவர் பூமாலை சூட்டிநிற்க, பாடசாலைமாணவர் மாணவிகள் பாமாலைசூட்டிநின்றனர். பின்னர் வண. கட்டளைக்குரவர் தம்முடன் ஒத்துழைத்த அமலோற்பவ பக்திச் சபைக் கன்னியர்களுக்கும், ஏனையவர்களுக்கும் தமது நன்றியைத் தெரிவித்தார். மேலும் தமது மாமியாரான திரிகோணமலையைச்சேர்ந்த திருமதி. வோத்தா-கெலிஅவர்கள் தம்முடைய விண்ணப்பத்துக்கிசைந்து பாத்திமாமாதாவினதும், மூன்றுபிள்ளைகளினதும் சுரூபங்களுக்கென 500 ரூபா தந்துஉதவியதற்காகவும் மனமார்ந்த நன்றிதெரிவித்து ஆலயத்தைத் திறந்து வைக்குமாறு ஆண்டவரவர்களைக் கேட்டுக்கொண்டார். அதன்மேல் யாத்திராலயத் திறப்புவைபவங்கள் நடைபெற்றுத் திவ்விய நற்கருணை ஆசீர்வாதமும் அருளப்பட்டது. மாதாவின்திருச்சுரூப ஸ்தாபக தம்பத்தின் அடியிலே ஆண்டவரவர்களால் சவுக்குமரமொன்று நாட்டப்பட்டது. மறுநாட்காலை ஆண்டவர்அவர்கள் திவ்விய பூசைப்பலி ஒப்புக்கொடுத்து, செபமாலைப்பக்தியை மேன்மேலும் விருத்தியடையச் செய்யுமாறுதூண்டி, ருஷியாவின் மனந்திருமபுதலுக்காக அவ்வாலயத்தில் மூன்றுபிரியதத்தமந்திரம் சொல்லுகிறவர்களுக்கு ஒவ்வொருமுறையும் 50 நாட்பலனும் அருளினார். பூசையின்பின் பங்குக்கிறீஸ்துவர்களால் சகலருக்கும் காலைப்போசனம் வழங்கப்பட்டது. அன்றுபிற்பகல் 6-30 மணிக்கு அதிவண. ஆர். எம். வன்டென்புஸ், வண. ஜி. ஈ. எல் வம்பேக், வண. லீயோ அல்பகேக் எனும்குரவர்கள் மூவராலும் வேஸ்பர்பாடப்பெற்றுச் சற்பிரசாதஆசீர்வாதம் அருளப்பட்டபின் கிறியதிருச்சுரூபம் சுற்றுப்பிரகாரமாகக் கொண்டுசென்று, திருச்சுரூப ஆசீர்வாதமும் அருளப்பட்டது. மூன்றாம்நாள் திங்கட்கிழமை மாலை 6-00 மணிக்கு வண. கட்டளைக்குரவர் திவ்வியபூசைநிறைவேற்றி அரியதோர் பிரசங்கமுஞ்செய்தனர்.

— நிருபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் கிழக்குச்
# சங்கீதவிழா

சென்ற 21-10-55 வெள்ளிக்கிழமை மாலை வழலாய் அமெரிக்கமிஷன் பாடசாலைமண்டபத்தில் வலிகாமம் கிழக்குப் பகுதிச் சங்கீதவிழா சிறப்பாகநடைபெற்றது. இவ்விழாவில் பலபாடசாலைகள்பங்குபற்றின. விழாமுடிவில் உரும்பிராய்க் கத்தோலிக்கபாடசாலை நாடகத்திற்குமுதற்பரிசில் பெற்றுக்கொண்டது. நாடகத்தின்பெயர் "மதுரமித்திரன்."

—நிருபர்.

## மட்டுநகர் கத்தோலிக்க
# இளைஞர் முன்னணி

ஞானத்தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்ட வண. எல். அல்பக்கேக்சுவாமியவர்கள் முன்னிலையில் இம்மாதம் 15-ந் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு நிகழ்ந்தகூட்டத்திலே கடவுள் வணக்கத்துடன் மேற்படி இயக்கம் குருவர் இல்லத்தில் ஆரம்பமாகியது. இயக்க அமைப்பாளரில் ஒருவராகிய திரு. ஜே. ஏ. எம். எம். தாஸன் அவர்கள் கத்தோலிக்க இளைஞர்முன்னணி ஏற்படுத்த வேண்டிய காரணத்தையும், இந்த இயக்கத்தின் நோக்கங்களையும எடுத்துக்கூறினர்.

### நோக்கங்கள்

(1) சமயகுரவர்களுடன் ஒத்துழைத்தல்.
(2) வேதவிசுவாசப் பரம்புதலுக்காக உழைத்தல்.
(3) சிறுவருக்கு ஞானஉபதேசம் கற்பித்தல்.
(4) கூடியளவு முயற்சியெடுத்து மனந்திரும்புதல்வேலையில் ஈடுபடுதல்.
(5) நோயாளாகளையும், ஏழைகளையும் தரிசித்துதவிசெய்தல்.
(6) கம்யூனிஸம், நாஸ்தீக பொதுவுடமைக்கொள்கைகள் கிறீஸ்தவர்களைப் பாதிக்காதவண்ணம் மெய்காப்பாளராக இருந்து பாதுகாத்தல்.
(7) மட்டுநகரில் அமைந்துள்ள குருமடத்திற்கு இயன்றளவு உதவி செய்தல்.
(8) தேவாலயங்களில் நடக்கும் தேவ ஆராதனைகளுக்குக் கிறீஸ்துவர்கள் அதிகமதிகமாகச் சமுகம் கொடுக்கும்படி செய்தல்.

பின்பு ஞானபோஷகர் வண. எல். அல்பக்கேக்சுவாமியவர்கள் தலைமையிலே ஏ. எஸ். என். ஜோர்ஜ்உவாஷிங்ரன், தாஸன், மத்தியூஸ், ஜோர்ஜ் சோமநாதர், மனுவேல், ஜெயசிலன் ஆகிய ஏழுபேர்கள்கூடிய நிர்வாகசபையும், திரு. ஏ. எஸ். என். ஜோர்ஜ் உவாஷிங்ரன் தலைவராகவும், திரு. சி. ஜோண் பேக்மன்ஸ் உபதலைவராகவும், திரு. ஜே. ஏ. எம். எம். தாஸன் காரியதரிசியாகவும், திரு. செ. பயஸ் அருள்ராஜ் உபகாரியதரிசியாகவும், திரு. ரி. தவராஜா தனாதிகாரியாகவும், திரு. இ. கபிரியேல் உதவித்தனாதிகாரியாகவும் கொண்டு மற்றும் அங்கத்தவர்களும் சேர்ந்த பொதுச்சபையும் நியமிக்கப்பட்டன. இயக்க அங்கத்தவர்கள் ஒன்றுசேர்ந்து மேற்குறிக்கப்பட்ட நோக்கங்களுக்காக அயராது உழைக்க வேண்டுமென்றும், சமயசம்பந்தமான விஷயங்களில் கவலையீனமாக இருக்கக்கூடாதென்றும், திறமையாக ஒவ்வொருவரும் கடமையாற்ற வேண்டுமென்றும் ஞானபோஷகர் வண. குரவர் எல். அல்பக்கேக்சுவாமியவர்கள் வெகுஅழகாக எடுத்துரைத்தார். அத்துடன் விசுவாசப்பரம்புதலுக்காக இயக்கத்தார் பலபலவழிகளில் அயராதுஉழைக்க வேண்டுமென்று ஜே. ஏ. எம். எம். தாஸன் அவர்கள் கூறிய கூற்றை இயக்கத்தார் ஏற்றுக்கொண்டதும் அதை ஏற்றமுறைப்படி செய்வதற்கான வழிவகைகளையும் தயாரித்தனர். பின்பு ஒவ்வொரு ஞாயிறுவாரமும் பிள்ளைகளுக்கு ஞானஉபதேசம் கற்பித்துக்கொடுப்பதற்குத் திரு. ஜி. மத்தியூஸ்அவர்களும், திரு. ஜோண் பேக்மன்ஸ் அவர்களும், திரு. சி. பயஸ் அருள்ராஜ்அவர்களும் நியமிக்கப்பட்டார்கள். இத்துடன் இயக்ககூட்டம் கடவுள்வணக்கத்துடன் இனிதுகலைந்தது.

ஜே. ஏ. எம். எம் தாஸன்,
க. இ. மு. காரியதரிசி

---

தூத்துக்குடியில் இருந்துவருகின்ற குஷ்டரோகர்சாலையை அடியிட்டவர், தூத்துக்குடியின் முன்னைநாள்மேற்றிராணியாரான மகாவந். எவ். ரி. றோச் ஆண்டவராவர். அவர் மேற்றிராணித்துவ அபிஷேகம்பெற்ற 32-ம் வருட நினைவுதினம் சென்றபுரட்டாசிமாதம் 23-ந் திகதி வந்துபோயிற்று. குஷ்டரோகர்களின் அன்பையும், நன்றியையும் காண்பிக்குமாறு அன்றுகாலை அவருடைய கருத்துகளுக்காக அச்சாலைக்கோவிலிலே ஓர் திவ்வியபூசை நிறைவேறியது. பிந்தஅவர்கள்போல் ஷெம்பகனூரில்வசிக்கும் ஆண்டவர் அவர்களுக்கு ஓர்ஞானப்பூச்செண்டும் அனுப்பிவைக்கப்பட்டது. இந்தக் குஷ்டரோகர்சாலையில் தற்போது 150 நோயாளர்கள் பாரமரிக்கப்பட்டு வருகிறார்கள்.

> **தன் சொந்த நலனைப் பாராட்டாமல் சமுதாயத்துக்காக உழைக்கிறவன் அதிகஞ் செய்கிறன்.**

## மோட்டர்சைக்கிள் விபத்து

குருநாகலிலிருந்து ஒன்பதுமைமல் தூரத்திலுள்ள மஹாக்கெலியா எனுமிடத்திலே சென்றதிங்கட்கிழமை டிவலப்பிட்டியின் உதவிப்போஸ்ற்மாஸ்றரான 27 வயதுடைய ஈ. கே. அமரதுங்கஎன்பவர் தமதுமோட்டர்சைக்கிளின் பின்புறமாக ஒருவரை ஏற்றிக்கொண்டு சென்றபோது அனுராதபுரத்தைநோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ்ஒன்றுடன் மோதியகாரணமாக மோட்டர்சைக்கிளின் பெற்றோல்தாங்கி வெடித்துத் தீப்பற்றிக்கொண்டது. அதனல் மோட்டர்சைக்கிளைச் செலுத்திச்சென்றவர் எரிந்துமரணமாயினர். அவர்பின்னல்ஏறிச்சென்ற ஓர்கிளாக்குவான ஈ. யு. அமரசிங்க என்பவரும் மிகமோசமாகத் தூக்கியெறியப்பட்டு ஏறக்குறைஉடனேதானே மரணமடைந்தார். சென்றஞாயிற்றுக்கிழமைகாலை 35 பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு கண்டியிலிருந்து கொழும்புக்குச்சென்ற பஸ்ஒன்று வகப்போலாவிலே ஓர்இறக்கத்தில்சரிந்து புரண்டமையால் 18 பிரயாணிகள் காயமடைந்தார்கள். இவர்களில்மூவர் அபாயநிலைமையில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

# சிந்தைக்கு விருந்தாகும்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தட்டிவிட்டாலும், சபையின்சிரேஷ்டர் பதவியை இவரால் தட்டமுடியவில்லை. சபையோரின் ஏகோபித்த தீர்மானப்படியே இவர் தமதுசபையின் அதிசிரேஷ்டரானர். அதிசிரேஷ்டராய்ப் பத்துவருடம் சேவித்தார்.

அதிசிரேஷ்டராய்இருந்து சபையை நிர்வகித்தகாலத்தில் சாந்தமே அவரின் சிறந்த பண்பாயிருந்தது. "சாந்தம்" என்பது அர்ச். பேணுட் கூறுவது போல் "உண்மையான தாழ்மையின் பிள்ளை" யேஆகும். தாழ்மையிற் சிறந்துவிளங்கிய இவர் சாந்தசுரூபியாகக் காட்சியளித்ததில் என்ன நூதனம்! இவரது சாந்தத்தின்காரணமாகப் பிரான்சீஸ்கன் சபையிலே சீர்கேடு ஏற்படுமோஎன்று சிலர்ஏங்கினர். ஆயின் சீர்கேட்டிற்குப்பதில் சீர்திருத்தமே சபையில்ஏற்பட்டது. சபைப் பிதாவாகிய பிரான்சீஸ் அதன்வளர்ச்சிக்கும், ஏற்றத்திற்கும் எவ்வளவுகாரணமாய் இருந்தாரோ அவ்வளவு இவரும்இருந்தார்.

பதவிக்குப் பயந்துபயந்து பொனவந்தூர் எவ்வளவுஒளிந்தாலும பதவியோ அவ்வளவு அவரைத் தொடர்ந்து தொடர்ந்து சென்றது. அதிமேற்றிராணித்துவ பதவியிலிருந்து நழுவிய இவரைத் திரும்பவும் பாப்பாசர்பதவி பின்பற்றத்தொடங்கியது. 4-ம்சாந்தப்பர் பிராப்தியானபின் பேதுருவின் ஸ்தானம் வெறுமையாய்இருந்தது. பொனவந்தூரே அப்பதவியை வகிக்க வேண்டுமென்று கருதினல் சங்கம் விழைந்தது. அப்பதவியையும் இவர் உதறிவிட்டார். பதவியை உதறிவிட்டபோதும் அப்பதவிக்கு ஒருவரைத் தெரிவு செய்யும்பொறுப்பை உதறவில்லை அதை ஏற்றுக்கொண்டார். 10-ம்கிறகோரியார் பாப்பானவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

10-ம்கிறகோரியார்என்னும் பாப்பானவர்காலத்தில் திவ்விய இஸ்பிரீத்து சாந்துவானவரைப்பற்றிக் கத்தோலிக்க திருச்சபைக்கும், கிரேக்க சபைக்குமிடையே இருந்த அபிப்பிராயபேதத்தைத் தெளிவுபடுத்தும்படி லையன்ஸ் நகரில் ஒருபொதுச்சங்கம் கூட்டப்பட்டது. சங்கத்திலே விவாதத்தைநடத்தும் பொறுப்பைப் பாப்பானவர் பொனவந்தூரிலேயே சுமத்தினர். இப்பொறுப்பை இவருக்குச்சுமத்துமுன்பு இவர் கருதினல்பதவியை ஏற்கவேண்டுமென்றும் கட்டாயஞ்செய்தார்.

கட்டாய அமைச்சலின்நிமித்தம் கருதினலாகியஇவர் திருச்சங்கத்தில் கலந்தார். அச்சங்கத்திலே பரிசுத்த பிதா, பத்திரியாக்குமார்இருவர், இருபத்திரண்டு கருதினல்மார், ஐந்நூறு மேற்றிராணிமார், அறுபதுமடாதிபதிகள்உட்பட ஆயிரம்பேர் சமூகமாயிருந்தனர். இப்பெரியசங்கத்தின் உயிர்நாடியாய்இருந்தவர் பொனவந்தூரே. பொனவந்தூரே பிடிவாதம்பண்ணிய கிரேக்கரின்மனதை வசியப்பண்ணியவர். அமைதியற்றிருந்த இருதயங்களில் அமைதிநிலவப் பண்ணியவர். கிறீஸ்துவத்தின் வச்சிரத்தூண்என்று விதந்துகொண்டாடப்படும் இச்சுத்தவாளர் தாழ்மைஎனும் புண்ணியத்தையே பெரிதாகப்போற்றிவந்தார்.

## Ceylon Government Railway

### LEVEL CROSSING REPAIRS

The Level Crossing at 231 miles 1 chain 51 links, between Pallai and Kodikamam Railway Stations, Northern Line, on the Kachchai Road, will be under repairs from 6 p.m. on 9-11-55 to 6 a.m. on 10-11-55. It will be totally closed to public road traffic from 10 p.m. on 9-11-55 to 6 a.m. on 10-11-55, and during this period the alternative route will be from Chavakachcheri.

---

## பண்டத்தரிப்புக் கிராமச்சங்கம்
# அறிவித்தல்

பண்டத்தரிப்புச் சண்டிலிப்பாய் றோட்டிலிருந்து பண்டத்தரிப்பு விளான்றோட்டை இணைக்கும் றோட்டுவேலைக்கு இத்தால் விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன. விண்ணப்பிப்போர் 10-11-55 காலை 9 மணியிலிருந்து மாலை 4-30 மணிக்குமுன் அதற்குரிய விண்ணப்பப்பத்திரத்தை ரூபாய் 50/- கட்டிப்பெற்றுக்கொள்ள வேண்டும். விண்ணப்பங்கள் 12-11-55 பகல் 10 மணிக்குமுன் வடபகுதி உதவி ஸ்தலஸ்தாபனஅதிபர் கந்தோரிலும், எனதுகந்தோரிலும் கிடைக்கக்கூடியதாகப் பதிவுசெய்ததபாலில் அனுப்பிவைத்தல்வேண்டும். உதவிஸ்தலஸ்தாபன அதிபரால் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாறர் மட்டுந்தான் விண்ணப்பிக்கலாம். மற்றும்விபரங்கள்யாவும் எனது கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம்.

சு. நாகமுத்து,
தலைவர்.
கிராமச்சங்கம், பண்டத்தரிப்பு.

---


**அக்காலத்தில் சிலகோவில்களில் நாள்தோறும் வாசிக்கப்பட்டுவந்தது. தற்போது திரும்பவும் வெளிவந்துள்ளது.**

**அர்ச்சிய சிஷ்டர்களின் — சரித்திரம் —**

**விலை: ரூபா 2.**

கிடைக்குமிடம்:
நல்லஆயன் பண்ணை,
5, அரமனைக்காரத் தெரு,
சென்னை—1


---

● தற்போது 68வயதுடையவரும், இரட்சகரின் திருக்காயங்கள் தம்மிலே அற்புதமாகப் பதியப்பெற்றவருமான கப்புச்சின் சபையைச்சேர்ந்த வண. பியோசுவாமியாரைக் கண்டுகொள்வதற்காக அதிகமதிகமானமக்கள் இத்தாலியிலே லெக்கோநகருக்குச் சமீபமாக அவர்சஞ்சரித்துவருகின்ற சான் ஜியோவன்னி றெரொன்டோ எனுமிடத்தைத் தரிசித்துவருகின்றனர்கள். உலகின் சகலபகுதிகளிலுமிருந்தே சுவாமியாருக்கு அனுப்பப்படுகின்ற காணிக்கைகள்கொண்டு அங்கே வேதனைப்படுவாருக்கென அடுக்கடுக்காய் ஓர் தொகையானகட்டடங்கள் அமைக்கப்படுகின்றன. காலகதியிலே இந்தக் கட்டடங்கள் ஐரோப்பாவிலே அதிகந் தற்காலமாதிரியான ஓர் ஆஸ்பத்திரியாக விளங்கவிருக்கின்றன.

---

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, October 27-1955.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியவேத பாதுகாவலன் அனுபந்தம் 27—10—1955

# புனிதவீரர்

அருமைச் சகோதரங்களே!

இற்றைக்கு நான்கு வருடங்களின் முன் உங்களுக்குச் சிறு செய்திக ளெழுதி மகிழ்வூட்ட விரும்பிப் "பாது காவலனில்" பாலர்பக்கத்தைத் தொடங் கினோம். இச்சேவைக்குப் பலர் உதவிபுரிந்து வந்தனர்.

இன்று உங்கள் பக்கம் உங்கள் மலராக மிளிர்கின்றது. புனித வீரர் என்ற புதுநாமம் பூண்டு பொலிவுற் றிருக்கிறது. இச்சந்தர்ப்பத்தை ஆக்கித்தந்த அச்சக அதிபருக்கு எம் மனம் நிறைந்த நன்றி

புனித வீரர் நீங்கள். புனித வீரர் உங்கள் பத்திரிகை. இவ்வளவு காலமும் உங்கள் பக்கத்தைச் சிறப்பிக்க நீங்கள் கதைகள், கவிதைகள், கட்டுரைகள் எழுதி அனுப்பியது போல உங்கள் பததிரிகை சிறபபடையத் தொடர்ந்து விஷயதானஞ் செய்வீர்களென்று நம்புகிறேன்.

❋ ❋ ❋

அடுத்த ஞாயிறு கிறீஸ்து தேவ அரசர் திருநாள். எங்கள் தலைவர் திருநாள் புனித வீரருக்கும் சுபதினம். எமது அரசர் அன்பின் செங்கோல் செலுத்த விரும்புகிறார். எம் இதயத்தில் ஆட்சிசெய்ய ஆவலாயிருக்கிறார். நாம் உடம்பட்டு அவருடைய ஆட்சியில் உட்படவேண்டும்.

அவருடைய சீவியம் எமக்கு மாதிரிகை; அவர்போதனை எமக்கு வாழும் வழி; அவர் மரணம் எமக்குச் சீவியம். நாம் அவரில் சீவிக்கவேண்டும். எம்மில் எல்லோரும் யேசுவைக் காணவேண்டும். யேசுவின் அரசாட்சி எம்மில் இடம் பெற வழிஇதுவே.

கிறீஸ்துவின் இராச்சியத்தைப் பரப்பும் வேலை கிறீஸ்துவின் அடியாரை, அன்பரைப் பொறுத்தது என்று நீங்கள் உணரவேண்டும். அவருடைய தலைமையை ஏற்றுக்கொள்ளுகிற மனிதர் அவர்செய்த ஊழியத்தைத் தொடர்ந்து செய்யக் கடமைப்பட் டிருக்கிறார்கள்.

புனித வீரர் இன்னொருகிறீஸ்து வாகையால் கிறீஸ்துநாதரைப் போல் வீரரும் ஏழைகளை நேசிக்க வேண்டும். கிறீஸ்து பாவிகளுக்காகப் பாடுபட்டது போல வீரரும் பாடுபடவேண்டும். உலகமக்கள் மெய்யான தேவனையறியவும், அவருடன் ஐக்கியமாகவும் யேசுஆசித்ததுபோல வீரரும்ஆசித்து உழைக்கவேண்டும்.

**உங்கள் அன்புள்ள, அண்ணா.**

(உங்கள் விஷயதானங்களை மேல்வரும் முகவரிக்கு அனுப்புங்கள்)

"அண்ணா," சஞ்சூசையப்பர் தாபனம்,
கொழும்புத் துறை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதன் படைப்பு

**சிங்காரத் தோட்டம் :**

கடவுள் உண்டாக்கிய வைகளில் சிறப்பு வாய்ந்தது இத்தோட்டம். மனித சாதிகளுக் கென்றே இத்தோப்பை உண்டாக்கினர். அத்தோட்டம் ஆச்சரியத்தைக் கொடுக்கும் விதத்தில் அமைந்திருந்தது ஒரு ஆழமான ஆறு, நாலு பிரிவுகளாகப் பிரிந்து அங்குள்ள மரங்கள், செடிகளுக்கு நீர்ப் பாய்ச்சியது. எல்லாவகையான மிருகங்களும் அத்தோட்டத்துள் உலாவித் திரிந்தன. அவைகள்யாவும் சாதுவான வையாய்க் காணப்பட்டன அத் தோட்டத்தில் அநேக பழமரங்கள் அமைந்திருந்தன. அவைகளில் ஒன்று சீவியத்தின் மரமாகவும், இன்னொன்று நன்மை, தீமைஅறிவைத் தரக்கூடிய மரமாகவும் அத்தோட்ட மத்தியில் தேவன் அமைத்திருந்தார் அத்தோட்டத்துள் பொன்னும், விலேயேறப்பெற்ற வைரக்கற்களும், சுரங்கப் பொருள்களும் புதைக்கப்பட்டிருந்தன. உண்மையில் அது ஓர் அழகான தோட்டம் தான். அதன் இயற்கை யின்பங்களே அநுபவிக்க மனுமக்கள் இல்லாதிருந்தனர்.

**முதல் மனிதன் :**

"எமது சாயலாய் நாம் மனிதனே உண்டாக்குவோம்" எனச் சருவேசுரன் கூறினர். பிதா சுதன் இஸ்பிரீத்துசாந்து ஆகிய மூன்று ஆட்களும் சேர்ந்து தமது சிருஷ்டிப்பில் பிரதானமான ஓர் சிருஷ்டியை உண்டாக்கப் போகிருர்கள். அதுதான் மனிதன். சம்மனசுகளுக்கு அடுத்ததாக இருப்பவன் அவனே. பூமியில் உள்ள மண்ணே எடுத்து ஓர் உருவம் செய்தார். கை, கால், தலே, சரீரம் முழுவதும் மண்ணினுல் உண்டாக்கப்பட்டவை. ஆனல், அவ்வுருவம் உயிரற்றதாய் இருந்தது. உடனே சருவேசுரன் ஒரு ஆன்மாவை உண்டாக்கி அவ்வுருவத்தை நடமாடச் செய்தார். ஆத்துமம் ஒரு ஆவி என்றுமே அழியாதது. மனிதன் நினைப்பதற்கும், நல்லது, கெட்டது அறிவதற்கும் ஆத்துமமே உதவியாய் இருக்கின்றது. நாங்கள் ஆத்துமத்தைக் காண முடியாமல் போனலும் சரீரத்தைப் பார்க்கிலும் அது பிரதானமானது என்



பதை நாம் அறிவோம். முதல் மனிதனின் பெயர் ஆதாம். அவனே இவ்வுலகத்தில் உள்ளோரின் முதல் தந்தை. ஆதாம் சீவிப்பதற்குச் சிங்காரத் தோப்புக் கொடுக்கப்பட்டது. அத்தோட்டத்தில உள்ள பட்சிகள், மீன்கள், மிருகங்கள் யாவையும் அடக்கியாளச் சருவேசுரன் ஆதாமுக்கு உத்தரவு கொடுத்திருந்தார். ஆதாம் அங்குள்ள மிருகங்கள் எல்லாவற்றுக்கும் பெயர் கொடுத்திருந்தான்.

**முதல் பெண் :**

ஆதாமைச் சந்தோஷப் படுத்துவதற்கு அநேக காரியங்கள் அத்தோட்

டத்தில் இருந்தன. ஆனல், அவன் நேசிக்கவும், கதைக்கவும ஒருவரும் இல்லாமல் போய்விட்டது. சருவேசுரன் "மனிதன் தனித்துவாழ்வது நல்லதல்ல; அவனுக்கு உதவியாக அவன் உருவத்திலேயே ஒருவரைக் கொடுப்போம்" எனக் கூறினர். பின்பு ஓர்நாள் ஆதாம் நித்திரை செய்துகொண் டிருந்தபோது சருவேசுரன் இவனுடைய இடுப்பில் இருந்து ஒரு எலும்பை எடுத்து, இவனுக்கு உதவியாக ஒரு பெண் உருவத்தை உண்டாக்கி அதற்கும் ஆத்துமத்தைக் கொடுத்தார். அவள் தான் ஏவாள். தன்னுடன் கதைப்பதற்குத் தனக்கு ஒரு ஆள் கிடைத்ததையிட்டு ஆதாம், சந்தோஷப்பட்டான். இதுவே முதற் திருமணம். சிங்காரத் தோப்பில் சருவேசுரனல் ஏற்படுத்தப்பட்டது. சகல மனுஷரின் ஆதித்தாய் தகப்பன் ஆதாமும், ஏவாளுமேயாகும். சகல மனுஷரும் இவர்களின பிள்ளைகள்.

**இவர்களின் சீவியம் :**

ஆதித்தாய் தகப்பன் சிங்காரத் தோப்பில் எவ்வளவு சந்தோஷமாய் இருந்தார்கள் என்பதைச் சற்றுயோசியுங்கள். சருவேசுரன் உண்டாக்கிய அதிசயங்களைப் பார்ப்பதற்கும், அறிவதற்கும் அவர்களுக்குப் புத்தியைக் கொடுத்திருந்தார். அறிவைப் பெருக்குவதற்கு நாங்கள் பிரயாசைப்படுவது போல அவர்கள் பிரயாசைப்படவில்லை. அவர்கள் அறிவதற்கும், நேசிப்பதற்கும் நல்லெண்ணங்களைக் கொடுத்திருந்தார். உலகமே புதுமைகளாலும், ஆச்சரியங்களாலும் நிறைந்திருந்தது. எப்பொழுதும் நீதியும், பரிசுத்தமும், சிநேகமுமுள்ள சருவேசுரனை நேசித்தார்கள். பிழைகள், குற்றங்கள் செய்யும் எத்தனங்கள், எண்ணங்கள் ஒன்றும் அவர்கட்கு இருக்கவில்லை. சிங்காரத் தோப்பில் ஆதாமும், ஏவாளும் பூரணசுகத்தை அநுபவித்தனர். அவர்களுக்கு எவ்வித மானநோயோ, பிணியோ இருக்கவில்லை. சருவேசுரனின் கட்டளையை மீறுதிருந்தால் அவர்களுக்குச் சாவே கிடைத்திருக்காது. கஷ்டப்பட்டு வேலைசெய்யவும் அவர்கட்கு நேர்ந்திருக்காது. அவர்களின் தொழில் சந்தோஷமாய் நடைபெறுவதினல் வேலைக்கஷ்டம் ஒன்றும் இராமல் யாவும் விளையாட்டாகவே இருந்தது. அவர்களுக்குப்பயம் காணப்படவில்லை. ஏனெனில், அங்கு ஒருவித துட்ட மிருகங்களும் காணப்படவில்லை. தோட்டத்தில் பூரணமான சுவாத்தியம் இருந்ததினல் அவர்களுக்குக் குளிரிலும், சூட்டிலும், புயலிலும் தங்குவதற்கு ஒரு வீடும் தேவைப்படவில்லை அக்காலத்தில் இருந்த சனங்களைப் பார்க்கிலும் எங்கள் ஆதித்தாய் தகப்பனே நாகரீகத்தில் முதிர்ந்திருந்தனர். அவர்கள் காட்டு மிராண்டிகள் போல் குகைகளில் வசிக்கவில்லை. இக்கொடைகள் அவர்கட்குப் பெரிதாய்க் காணப்படவில்லை. எல்லாக் கொடைகளைப் பார்க்கிலும் சருவேசுரன் அவர்களுக்குமேலான ஓர் வரத்தைக் கொடுத்திருந்தார். அக்கொடை இவர்களைத்தேவனின் இராச்சியத்தில் ஓர் அங்கத்தினராக்கியது. சருவேசுரனே இவர்களின் பிதா இவர்கள் சருவேசுரனின் புத்திரர்கள். பரிசுத்தமாயும், சருவேசுரனுக்குப் பிரியப்படவும், இராச்சியத்தில் அவருடன் இருக்கவும் உதவிசெய்தது இக்கொடையே. இதைத்தான் தேவ இஷ்டப்பிரசாதம் என்று அழைக்கிறோம்.

**ஆத்துமம் அல்லது சரீரம் :**

ஆதாம், ஏவாளைப்போல் எங்களுக்கும் ஒரு சரீரமும், ஆத்துமமும் உண்டு. இவை இரண்டும் சருவேசுரனின் கொடைகள். இவைகளை நாம் கவனமாய்க் காப்பாற்ற வேண்டும். சாப்பிடுவதாலும், நித்திரை செய்வதாலும், விளையாடுவதாலும் எங்கள் உடம்பைக் காப்பாற்றுகிறோம். செபம் செய்வதாலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தபம் செய்வதாலும், நற்கிரிகைகளாலும், பாவத்தை விலக்குவதாலும் எங்களுடைய ஆத்துமத்தைக் காப்பாற்றுகிறோம். இவை இரண்டிலும் எது விசேடமானது? ஆத்துமமா? அல்லது சரீரமா? உண்மையில் ஆத்துமம்தான் விசேடமானது. அது ஒருகாலும் அழியாது.

நாங்கள் எங்கள் ஆத்துமத்தைக் கவனிக்கிறது மிக அவசியமானது. எங்கள் செபங்களையும் பரித்தியாகங்களையும், நற்கிரிகைகளையும் பாவத்தை மேற்கொள்ளுதலையும் நாம் ஒருகாலும் மறவாதிருப்போமாக. இவைகளை நேர்மையாய்ச் செய்யப் பிரயாசைப் படுவோமாக.

---

## கலிலேயோவின் கதை

இவர் வட இத்தாலியாவிலுள்ள பிசா என்னும் ஊரில் 1564-ம் ஆண்டு பிறந்தார். இவர் முதலில் வைத்தியம் படித்து பின் விஞ்ஞானத்திலும், கணிதங்களிலும் அதிக மோகம் கொண்டதால் முந்தியதைக் கைவிட்டார். இவருக்கு இருபத்தைந்தாவது வயது நடக்கும் போது பிசாவிலுள்ள பல்கலைக் கழகத்தில் கணித விற்பன்னராக நியமிக்கப் பட்டார்.

இவர் சுயேச்சையாகவே சிந்திக்கும் ஆற்றல் உள்ளவர். பிறர் சொல்லும் கூற்றில் நம்பிக்கை வைக்காது எதையும் தன் பரிசோதனை மூலம் உண்மையை நிரூபித்துக்காட்ட விருப்பமுடையவர்.

முதல் முதலாக இவர் கிரேக்கரது தப்பான கொள்கையைப் போக்கடித்தார். அஃதாவது, அந்தக்காலத்துக் கிரேக்கர் பாரமான பொருட்கள் விழும்போது, இலேசான பொருட்களிலும் பார்க்கக் கூடிய வேகத்தோடு விழுகின்றன என்ற பிழையான எண்ணத்தை உடையோராய் இருந்தனர் இவ்வெண்ணத்தை மாற்றுவதோ மிகவும் கஷ்டமாக விருந்தது.

எனவே, ஓர் உயரமான இடத்திலிருந்து தன் பரிசோதனையை நடத்த வேண்டுமெனத் துணிந்தார். ஓர் உயர்ந்த இடத்தைத் தேடினார்.

அவ்வூரில் ஓர் கோபுரமிருந்தது. இக் கோபுரத்தின் அடித்தளம் பெலப்பில்லாமையால் ஓர் பக்கம் சரிவதாயிற்று. இதைத்தான் பிசாவின் சாந்தகோபுரமென அழைக்கின்றோம்.

இக்கோபுரத்தை தன் பரிசோதனைக்குத் தகுந்ததென எண்ணி இதை அதற்கு இலக்காக்கினர்.

ஒரு நாள் எல்லோரும் கோபுரத்தின் அருகாமையில் ஒன்று சேர்ந்தனர். அவ்வேளை இவர் கோபுரத்தின் உச்சிக் கேறினர். ஏறும்போது 100 இருத்தலுடைய ஒரு பெரியகுண்டையும், 10 இருத்தலுடைய ஒரு சிறிய குண்டையும் தன்னுடன் எடுத்துச்சென்றார். இரண்டையும் ஒரே நேரத்தில் விழவிட்டார். இரண்டும் ஒரே வேகத்தில் வந்து நிலத்தை மோதின. எல்லோரும் அதிசயித்தனர்.

எனவே, இப்பரிசோதனை மூலம் கிரேக்கரின் பழையஎண்ணத்தை ஒழித்துத் தன் உண்மையான முடிவை நிலைநாட்டினர். அஃதாவது "எல்லாப் பொருட்களும் ஒரே வேகத்தில் விழும் என்பதே."

---

### —: விகடம் :—

முதல்வர் :— என்மனைவி தனக்கு ஒரு வேலைக்காரன் இருந்தால் தேவலை என நினைக்கிறாள்.

மற்றவர் :— ஸார்! உங்க மனைவி அப்படியாவது நினைக்கிறாளே. என் மனைவி என்னையே ஒரு வேலைக் காரனாக நினைத்துக்கொண் டிருக்கிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org